2026

# புதிய தேடல்
# PUTHIA THEDAL

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்

**தமிழ் மாத இதழ்**
**Tamil Monthly Magazine**





Volume 17 Issue 9 September 2026 Pages 36 Price Rs.20/- Annual Subscription - 200/-

மலர் 17 இதழ் 9 செப்டம்பர் 2026 பக்கம் 36 விலை ரூ.20/- ஆண்டு சந்தா - 200/-

Be Naturea

# Herbal Hair Oil

**Nature's Nourishment for Stronger, Thicker, Healthier Hair**

*"Good Hair is not just a Beauty, it's a Reflection of Good Health."*

**100% NATURAL & HANDMADE**

## BENEFITS

- Promotes Hair Growth
- Strengthens Hair Roots
- Reduces Hair Fall & Breakage
- Nourishes Scalp & Prevents Dandruff
- Adds Natural Shine & Softness
- 100% Natural & Chemical Free




## GOODNESS OF NATURE

Bhringraj · Hibiscus · Amla · Neem · Curry Leaves · Fenugreek · Coconut Oil

- No Mineral Oil
- No Silicones
- No Parabens
- No Artificial Fragrance

## GM YOGA NATUROPATHY CLINIC

THIRUVATTAR

Heal Naturally • Live Healthy

9442711782

Thiruvattar,
Kanyakumari District,
Tamil Nadu - 629177

NOURISH YOUR HAIR NATURALLY, EVERY DAY

**புதிய தேடல்**

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள்முனைவர் **இரா. பால் ரிச்சார்ட் ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச்செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள்முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி:*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் - 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்:** newputhiathedal@gmail.com

**தனி இதழ் : ₹ 20**

**ஆண்டுச் சந்தா : ₹ 200**

**ஆயுள் சந்தா : ₹ 2000**

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| **பலவண்ண அட்டை வெளிப்பக்கம்** | : ₹ 12000 |
| **பலவண்ண அட்டை உள்பக்கம்** | : ₹ 7000 |
| **முழுப்பக்கம் கறுப்பு** | : ₹ 2000 |
| **அரைப்பக்கம் கறுப்பு** | : ₹ 1000 |



## ஆசிரியரின் அன்பு வரிகள்

அருள்முனைவர்

**இரா. பால் ரிச்சார்ட் ஜோசப்**

**புதுப்பிறப்படைய, புதிய தேடலின் அன்பு வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துகள்...**

மனிதநேயம் வாழ அமைதியை நிலைப்பெறச் செய்வதே உண்மையான வீரம்.

**"வீரம் வெட்டுவதில் இல்லை; கட்டுவதில் இருக்கிறது**
**வீழ்த்துவதில் இல்லை; வாழ்த்துவதில் இருக்கிறது**
**தாக்குதலில் இல்லை; ஆக்குவதில் இருக்கிறது**
**உடைப்பதில் இல்லை; உருவாக்குவதில் இருக்கிறது"**

உண்மையான வீரம் அடுத்தவர்களை வெல்வதில் இல்லை. தன்னைத்தானே வெல்வதில் இருக்கிறது. நம் எண்ணங்கள் வலிமையானவை. அவற்றை நாம் பூக்களைப் போல தூவவும் முடியும். கற்களைப்போல எறியவும் முடியும். நாம் பூக்களைத் தூவினால் அவை மாலைகளாக வருகின்றன. நாம் கற்களை எறிந்தால் அவை காயங்களாக நமக்கே திருப்பி வருகின்றன.

புன்னகை சிந்த பணமோ, செல்வமோ தேவையில்லை. உள்ளத்திலிருந்து ஏற்படும் உண்மையான உணர்வாகப் புன்னகை பூக்கள் மலர்வதே நல்லெண்ணங்களின் வெளிப்பாடு. கோபம் தோல்வியடைகின்றபோதெல்லாம் அன்பு வெற்றியடைகிறது. கடுஞ்சொல் தோற்கின்றபோதெல்லாம் மௌனம் வெற்றிபெறுகின்றது. வன்மை தோற்கின்ற இடங்களிலெல்லாம் மென்மை வெற்றிக்கொள்கிறது. இதயத்திலிருக்கும் முகமூடியை அகற்றினால் கண்களின் வழியாகக் கருணை தானாகக் கசியும். உலகமே அன்பு மயமாக மாறும். இலையுதிர் மரங்களும் பூக்க ஆரம்பிக்கும். அமைதி மகிழ்ச்சியை அறுவடை செய்யும் விளைநிலமாகும்.

நீதியை நிலைநாட்டி, காயங்களைக் குணப்படுத்தி, கலக்கங்களைப் போக்கி, அமைதியை உருவாக்குவது அதிதூதர்கள் நமக்குக் கற்றுத்தரும் வாழ்க்கைப்பாடம். இறைத் தூதர்களுடைய வழியில் மனிதராக வாழ்ந்து அமைதியின் உறைவிடமாகத் திகழ்ந்தவர் புனித பிரான்சிஸ் அசிசியார். இறைவா! என்னை உமது அமைதியின் கருவியாக்கும் என்று அவர் மன்றாடிய இறைவேண்டல் இன்றளவும் உலகெங்கும் அமைதியின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. பகைமை உள்ள இடத்தில் அன்பையும், ஐயமுள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும் விதைப்பதே உண்மையான அமைதியின் தூதுவர்களுக்கான அடையாளம் என்பதைத் தன் எளிமையான வாழ்வால் வாழ்ந்து காட்டியவர் புனித பிரான்சிஸ் அசிசியார்.

அவரது யூபிலி ஆண்டில் அமைதியின் தூதுவர்களாய் வாழ்வோம் என்பதை வார்த்தைகளால் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டுவோம். அமைதிக்குச் சான்று பகரும் தூதுவர்களாவோம்.



# ஆயரின் அமுத மொழிகள்

**புத்துலகம் படைக்கப் புதிய தேடல் வாசகர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்!**

நம் ஆண்டவர் இயேசுவுக்கு அமைதியின் அரசர் எனும் சிறப்புமிகு பெயர் உண்டு. என் அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன் என்று இயேசு நம்மை அமைதியின் தூதர்களாக இம்மண்ணில் வாழ அழைக்கிறார்.

அமைதி என்பது வெளியே சத்தமில்லாத ஆர்ப்பாட்டமில்லாத நிலையல்ல, மாறாக உள்ளுக்குள் இறைவன் ஆட்சி செய்யும் சலனமில்லாத நிலை. அநியாயத்தின் நடுவிலும் நீதியைத் தேர்ந்தெடுப்பதில், காயத்தின் நடுவிலும் மன்னிப்பைத் தேர்ந்தெடுப்பதில், வெறுப்பின் நடுவிலும் அன்பைத் தேர்ந்தெடுப்பதில் இந்த அமைதி வெளிப்படுகிறது.

புனித அசிசியார் வெறுமனே அமைதியைப் பற்றிப் பேசியவரல்ல மாறாக, அமைதியாகவே வாழ்ந்தவர். தன்னலத்தையும் செல்வத்தையும் உதறிவிட்டு அமைதியின் அரசரைப் பற்றிக் கொண்டவர். உலகம் மனிதர்களைப் பிரிக்கிறது. மாறாக, இயேசுவின் அமைதி அன்பினால் மனிதர்களை இணைக்கிறது.

விண்ணகத்தூதர் அணி மண்ணகத்தில் பாடிய முதல் பாடலே அமைதியின் பாடல்தான். “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” என்பதே அவர்தம் பாடலாய் ஒலித்தது. இறைவனுக்கு மாட்சியைச் செலுத்தும் வாழ்க்கை என்பது அவனியில் அமைதியை உருவாக்கும் வாழ்க்கையே. இறைவனை அன்பு செய்கிறேன் என்று சொல்லி இறைச்சாயாலாம் மனிதர்களை வெறுப்பவர்கள் முரண்களின் குழந்தைகள். அமைதியை விரும்புதல் என்பது தீமையை அனுமதிக்காமல் நன்மையை அனுமதிப்பது, ஆதரிப்பது, நடைமுறைப்படுத்துவது.

முதன்மைத் தூதர் மிக்கேல் தீமைக்கு எதிரான போராட்டக் களத்தில் வீரராயத் திருவெளிபாட்டு நூலில் காட்சியளிக்கிறார். சுரண்டல், ஒடுக்குமுறைகள் முன் கைகட்டி நிற்பதல்ல அமைதி. மாறாக அறம் இல்லாதவற்றைச் சமரசமின்றி எதிர்ப்பதே அமைதி ஆகும். இரபேல் தூதர் குணமாக்கும் தூதராகக் காட்சியளிக்கிறார். சண்டையை நிறுத்துபவர் மட்டுமல்ல. மாறாக, சண்டையில் காயமடைந்தவர்களின் காயங்களைக் கட்டுபவரும் அமைதியின் தூதரே. கபிரியேல் தூதர் கடவுளின் ஆற்றலோடு அச்சத்தையும், கலக்கத்தையும் போக்கி உண்மையை உணர்த்துகிறார், அமைதியை உருவாக்குகிறார்.

அமைதியின் தூதர்களாக அழைக்கப்பட்டவர்கள் நாம், வெறுப்பை விலக்கிவிட்டு அன்பை விதைப்போம். போட்டியை விட்டுவிட்டு ஒற்றுமையை அறுவடை செய்வோம். வெறுப்புக்குப் பதில் இரக்கத்தைத் தேர்ந்தெடுப்போம், இயேசுவின் வழி அமைதிக்குச் சான்று பகர்ந்து புனித அசிசியாரின் யூபிலி ஆண்டில் அமைதியின் தூதராய் வாழ்வோம், அன்பில் நிலைப்போம், மகிழ்ச்சியைப் பறைசாற்றுவோம்.

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

மேதகு ஆயர் **ஆல்பர்ட் G.A. அனஸ்தாஸ்**,
குழித்துறை மறைமாவட்டம்.

இதழ் 09 மலர் 17 செப்டம்பர் 2026

எண் படைப்பு


1. ஆசிரியரின் அன்பு வரிகள்
2. ஆயரின் அமுத மொழிகள்
3. மாற்றுப்பாதையில் மனிதம் தேடிய புனிதர்
4. அகிம்சை ஆளட்டும் அமைதிப்புறா பறக்கட்டும்
5. அன்னையின் அருள்மாலை ஜெபமாலை
6. மனநலமே நம் வாழ்வின் முழுநலம்
7. மனித குலத்தின் அமைதியான புரட்சி
8. முகமறியா உறவுகளின் மானுடம் காக்கும் மனித நேயம்
9. திருச்சபை கொண்டாடும் வானதூதர்கள்
10. ஒரு நம்பிக்கையின் பயணம்
11. உறவாடும் முதுமை
12. வழிகாட்டும் ஒளிச்சுடர்
13. பெண் குழந்தைகள் சமூக முன்னேற்றத்தின் திறவுகோல்கள்
14. சிற்பிகளும், சிற்பங்களும்
15. பணிக்குழுக்களின் செயல்பாட்டு அறிக்கைகள்



# மாற்றுப்பாதையில் மனிதம் தேடிய புனிதர்
# பிரான்சிஸ் அசிசியார்

பேரருள்பணி முனைவர் **ச. சேவியர் பெனடிக்ட், DCL.**
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர், குழித்துறை மறைமாவட்டம்).

புனித பிரான்சிஸ் அசிசியாரின் விண்ணகப் பிறப்பின் 800 ஆவது ஆண்டினைப் புனித அசிசியார் ஆண்டாக 10 ஜனவரி 2026 முதல் 10 ஜனவரி 2027 வரை சிறப்பிக்கத் திருத்தந்தை 14 ஆம் லியோ அகில உலகத் திருஅவைக்கு அழைப்பு விடுத்துள்ளார். புனிதரின் வாழ்க்கையைக் கற்று, அறிந்து, அவரது ஆன்மீகத்தை ஆழமாகப் புரிந்து, அவர் இயற்கையை நேசித்தது போல நாமும் நேசிக்கவும் அமைதியை நிலைநாட்ட முயற்சித்ததுபோல நாமும் முயற்சிக்கவும் திருத்தந்தை அறிவுறுத்துகின்றார். பதிமூன்றாம் நூற்றாண்டின் துவக்க காலங்களில் திருஅவை பயணித்த பாதைக்கும், ஆதிக்க அரசுகள் காட்டிய பாதைக்கும் மாற்றுப் பாதையினை இயேசுவின் உண்மையுள்ள சீடனாக நற்செய்தியின் ஒளியில் வழிநடந்து உருவாக்கியவர் புனித அசிசியார்.

## திருஅவையின் வானளாவிய அதிகாரம்

பதிமூன்றாம் நூற்றாண்டில் திருஅவை உலகு சார்ந்த அரசுபோன்று செயல்பட்டது. திருத்தந்தை கிறிஸ்துவின் பதிலாள் என்று அழைக்கப்பட்டார். திருத்தந்தையை யாரும் தீர்ப்பிட முடியாது. திருஅவை ஒருபோதும் தவறிழைக்காது. அரசர்களை பணியமர்த்தவும், பணிநீக்கம் செய்யவும் திருத்தந்தைக்கு அதிகாரம் உண்டு. உண்மையில் உலகின் அதிகாரம் குவித்து வைக்கப்பட்ட மையப்புள்ளியாகத் திருத்தந்தை பதவி அமைந்திருந்தது. திருத்தந்தையின் செயலகம் - போருக்கான தயாரிப்பு, போரில் ஈடுபடுவது, மாநிலங்களைப் பராமரிப்பது, அயலக உறவினை மேம்படுத்துவது, வரி நிர்ணயிப்பது, வரி வசூலிப்பது, குற்றச்சாட்டுகளுக்குத் தீர்ப்பு வழங்குவது என மற்ற அரசு நிர்வாகம் போலவே செயல்பட்டது.

## நாட்டு அரசுகளின் போக்கு

பேராசை கொண்ட அரசர்கள் தங்கள் நாட்டு எல்கையை விரிவுபடுத்தப் பக்கத்து நாடுகளுடன் போர் புரிந்தனர். இனக்குழுக்களிடையே உள்நாட்டுக் கலகங்களும் தொடர் நிகழ்வாக இருந்தன. சிலுவைப் போரின் தாக்கம் ஏழைகளை மேலும் ஏழைகளாக மாற்றின. பணம் சேர்த்து வைத்திருப்பவர்கள் உயர்ந்தவர்களாகவும் பலம் பொருந்தியவர்களாகவும் கருதப்பட்டனர். வியாபாரம் செய்து லாபம் ஈட்ட விரும்பியவர்கள் நகர்ப்புறம் நோக்கி நகர்ந்தனர். வட்டிக்குப் பணம் கடன் கொடுக்கும் முறை தொழிலின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏழ்மையில் இருப்போர் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

## துறவறக் குழுமங்களில் வர்க்கத்தன்மை

துறவறத்தை மேற்கொள்வது சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை கொடுத்ததால் மேல்தட்டு மக்களுக்கே துறவறப்பயிற்சி இல்லங்களில் அனுமதி வழங்கப்பட்டது. தங்கள் பிள்ளைகளை துறவற வாழ்விற்கு அனுப்பும் பெற்றோர் பெரும் அளவில் சொத்துக்களையும், நன்கொடைகளையும் துறவு இல்லங்களுக்கு வழங்கினர். அரச நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு சொத்துக்களையும், பல சலுகைகளையும் வழங்கியது.



துறவற மடங்கள் நற்செய்தியின் வாழ்விடம் என்பதைவிட ஆடம்பர வாழ்வின் உறைவிடங்களாக மாறின. நற்செய்தியை அறிவிக்கும் பணிக்கு பதிலாக அரசருக்கு ஆதரவாகப் போரில் ஈடுபடுதல், அரசரின் எதிரிகளை நாட்டிலிருந்து விரட்டுதல், அரசரின் நலனுக்காக இறைவேண்டல் செய்தல் போன்ற பணிகள் முன்னிடம் பிடித்தன.

## மனிதம் தேடும் மாற்றுப்பாதை

நிறுவன மையத்தை நோக்கி சென்று கொண்டிருந்த திருஅவையின் ஆடம்பரப் போக்கிற்கு மாற்றாக அசிசியார் கிறிஸ்துவை முழுமையாக பின்பற்றி வாழ்வது அல்லது கிறிஸ்து வழி வாழ்வது என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தார். திருஅவையின் அதிகாரப் போக்கினை வெறுத்தார். துறவியரின் ஆடம்பர வாழ்வினைக் கண்டித்தார். இயேசுவின் எளிய பிறப்பு, ஏழைகள்மீது அவர்கொண்ட கரிசனை, கடுமையான பாடுகள், கொடூரமான சாவு ஆகியவற்றை உள்வாங்கிய அசிசியார், அந்த விழுமியங்களை துறவறத்தார் பின்பற்ற அழுத்தம் கொடுத்தார். நற்செய்தி சுட்டிக்காட்டும் ஏழ்மையை பின்பற்றுவதற்கு முதலிடம் கொடுத்தார்.

அசிசியார் காட்டிய ஆன்மீகப் பாதை மலட்டுத் தன்மை கொண்ட நிறுவனத் திருஅவைக்கு மாற்றான ஒரு ஆன்மீக விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி சாதாரண மனிதனாக ஏழைகள் மத்தியில் வாழ்ந்த இயேசுவை பின்பற்றி வாழத் தூண்டியது எனலாம். வார்த்தையால் போதிப்பதைவிட வாழ்வால் போதிக்கும் அசிசியார், முற்றும் துறந்த பற்றற்ற மனிதராக வாழ்ந்து காட்டினார். உணவு, உடை, உறைவிடம் என்ற அடிப்படைத் தேவைகளுக்குக்கூட தனக்கெனச் சேமித்து வைக்கவில்லை. பயணித்துக்கொண்டே போதித்தார். தன் உடைகளை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்தார். பிச்சை எடுத்து உண்டார். நாளைய தினத்தைக் குறித்து தான் கவலை கொள்ளாமல் நாளைய தினம் தன்னைப்பற்றிக் கவலை கொள்ளட்டும், நான் நற்செய்தியை அறிவிக்கின்றேன் என்ற உறுதியான உளப்பாங்குடன் வாழ்ந்தார்.

### வணிக முதலாளித்துவத்திற்கு மாற்றுப்பாதை

அசிசியாருக்கு, உழைப்பாளர்கள்மீதும், ஏழைகள்மீதும் கரிசனையில்லாத தன் தந்தையின் வியாபார யுக்தி பிடிக்கவில்லை. தந்தையின் வியாபாரத்திற்கு உதவி செய்து வந்த அசிசியார் தான் அணிந்திருந்த ஆடையைக்கூட உதறித்தள்ளிவிட்டு துறவறத்தை மேற்கொண்டார் என்பது வரலாறு. காரணம், அன்றைய வணிக முதலாளித்துவம், வர்த்தகத்தின் வழியாக அதிக இலாபம் ஈட்டுவதை குறிக்கோளாகக் கொண்டிருந்தது. உற்பத்திப் பொருட்களும், வணிகமும் தனிநபர் உடைமையாக, தனிநபரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. கிராமத்துப் பொருளாதாரத்தை விட்டுவிட்டு அதிக இலாபத்திற்காக நகர்புறங்களில் விற்பனை நிலையங்களை அமைத்தனர். சந்தையின் தேவைக்கேற்பப் பொருட்களின் விலையை மாற்றினர். வணிகத்தின் மூலம் கிடைக்கும் இலாபம் அனைத்தும் ஒருசில பெரிய வணிகர்கள் மற்றும் அரச குடும்பங்களிடம் மட்டுமே சேர்ந்தது. இதனால் ஏழை பணக்காரன் இடைவெளி அதிகரித்தது. கிராமத்து மக்களும் ஏழைகளும் வறுமைக்குத் தள்ளப்பட்டனர்.

வணிக முதலாளித்துவத்தைப் புனித அசிசியார் கடுமையாக எதிர்த்தார். பேராசை, அதிக இலாபம் ஈட்டுதல், அதிக செல்வம் சேர்த்தல் போன்றவை ஆன்மீக வாழ்விற்குப் பேராபத்து என்று சாடினார். பணத்தின்மீது கொண்ட மோகம் அதிகாரப் போதைக்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்த அசிசியார் தன் சபையைச் சார்ந்த உறுப்பினர்கள் கடினமான ஏழ்மையை கடைபிடிக்க வலியுறுத்தினார். காசுகளைத் தொடுவதுகூடப் பாவம் என்று போதித்தார். தங்களிடம் தேவைக்கு அதிகமாக இருப்பவற்றை அன்றன்றே ஏழைகளுக்கு கொடுத்துவிட வேண்டும் என்றார். பணம் படைத்தவர்களோடு தொடர்புகளை சுருக்கிக் கொண்டு ஏழைகளோடு தன்னையும், சபை உறுப்பினர்களையும் ஐக்கியப்படுத்திக் கொண்டார். அசிசியாரின் வாழ்வும் போதனையும் திருஅவையின் இறையியலாளர்களையும், தத்துவ மேதைகளையும் பெரிதும் சிந்திக்க வைத்தது. அவர்களின் இறையியலாக்கமும், தத்துவங்களும் "அறம் சார்ந்த வணிகம்" என்பதை நோக்கி மடைமாற்றம் பெற்றது என்பதைத் தொடர்ந்து வந்த காலங்களில் திருஅவையின் போதனைகளில் காண முடிகின்றது.

### நாட்டின் எல்லைகளை அல்ல இதயத்தின் எல்லைகளை விரிவுபடுத்துங்கள்

ஐந்தாம் சிலுவைப்போர் நடந்து கொண்டிருந்த காலம் அது (1217-1221). புயலுக்குப்பின் அமைதி என்பதுபோல போருக்குப்பின் அமைதி அல்லது வெற்றி என்பதை அசிசியாரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. போருக்குப்பின் மிஞ்சுவது, உயிர்கள் இழப்பு, பஞ்சம், வறுமை, கொள்ளைநோய் என்பவைதான். இதனை உணர்ந்த அசிசியார் அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்தார். அவரால் போரற்ற அமைதியை ஏற்படுத்த இயலவில்லை. அமைதிக்காக இறைவேண்டல் செய்தார். இன்று உலகம் முழுவதும் அவரது அமைதிக்கான செபம், பாடலாக, இறைவேண்டலாக இறைமக்கள் இதயங்களில் ஒலிக்கின்றது.

புதிதாக உருவாக்கப்பட்ட நாட்டின் சட்டங்கள் பல, தனி நபரின் நில உரிமைகளையும், சொத்துரிமைகளையும் (Ownership) பாதுகாப்பதாகவும், உறுதிப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. சொத்துக்களும், பொருட்களும் சேர்த்துவைத்து உரிமை கொண்டாட அல்ல, எல்லா மக்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கும், பயன்பாட்டிற்கும் உரியது என்ற கொள்கையை அசிசியார் முன்வைத்தார். இக்கருத்தைக் காலப்போக்கில் அவரது துறவற சபையால்கூட ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இயேசுவின் இரக்கத்தால் நிறைந்த இதயங்களின் எல்லைகளை விரிவாக்குவதே அமைதி வாழ்விற்கான வழி என்று அசிசியார் உணர்த்தியதை அனைவரும் ஏற்றுக்கொண்டாலும் நடைமுறை வாழ்வில் செயல்படுத்தத் தேவையான ஆன்மீக பலம் இன்றைய தலைமுறையினரிடம் இல்லை என்பதே உண்மை.

புனித அசிசியார் வாழ்ந்து காட்டிய மாற்றுப்பாதை பொருள் உலகு சார்ந்த பாதையல்ல, அது ஆன்மீகப்பாதை. இல்லறத்தாராயினும் துறவறத்தாராயினும் மத சடங்குகளைத் தாண்டி ஆன்மீகத்தில் அடியெடுத்து வைப்போருக்கு அவர் கூறிய உண்மைகள் புரியும். அவர்காட்டிய பாதையில் பயணிப்பதன்மூலமே இயற்கையோடு இணைந்த அழகான, அமைதியான, மகிழ்ச்சியான உலகை உருவாக்க முடியும்.



# அகிம்சை ஆளட்டும் அமைதிப்புறாப் பறக்கட்டும்

அருள்முனைவர். எ. ஒய்சிலின் சேவியர்

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 21 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் சார்பில் சர்வ தேச அமைதி தினம் நினைவுக்கூரப்படுகிறது. ஒவ்வொரு தினத்திற்கும் ஒரு நோக்கம் உண்டு. இந்த அகிம்சை அமைதி தினம் கொண்டாடுவதற்கும் நோக்கம் உண்டு. அது உலகெங்கிலும் 24 மணி நேரத்திற்கு அகிம்சையைக் கடைப்பிடிப்பதும், போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதும் ஆகும். இது முதன்முதலில் 1981 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் மனித நேயத்தையும் உலகளாவிய ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தித் தொடங்கப்பட்டது.

**“எங்கே நிம்மதி எங்கே நிம்மதி**

**அங்கே எனக்கோர் இடம் வேண்டும்!”**

**“அமைதி தேடி அலையும் நெஞ்சமே**

**அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே”**

**“அமைதியின் தெய்வமே இறைவா**

**என் இதயத் தலைவனே”**

- போன்ற பாடல்கள் வீதிகளிலும், வீடுகளிலும், வீதியோரங்களிலும் மட்டுமல்ல ஆலயங்களிலும் ஒலிப்பதைக் கேட்டு இதயத்தை இழந்துவிடுகிறோம். அமைதிக்காக ஏங்காத மனிதர்கள் இல்லை. அரண்மனையில் அமர்ந்திருக்கும் அரசன் முதல் அடிமட்டத்தில் அடிபடும் மனிதன் அத்தனைப்பேரும் எந்த விதிவிலக்குமின்றி அமைதியைத் தேடுகிறான். இன்று அமைதி என்பது இல்லங்களில் இல்லை. இதயங்களில் இல்லை. உள்ளங்களில் இல்லை. எங்குப் பார்த்தாலும் வன்முறை வரையறையில்லாமல் பரந்து நிறைந்து காணப்படுகிறது. அகிம்சை வாழ வேண்டிய இடத்தில் அம்புகளும், ஆயுதங்களும் அகிலத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. அமைதிப் புறாப் பறக்க வேண்டிய இடத்தில், தோட்டாக்கள் பறந்து



கொண்டிருக்கின்றன. உலகை உலா வருகின்றபோது உயிர்களுக்கு உத்திரவாதமில்லை. போர்களால் உலகமே உயிரற்றுக்கிடக்கிறது. வன்முறையால் உலகம் வளமை குன்றி வறண்டு கிடக்கிறது. பகைகளால் உலகம் புகைமண்டலமாய் நிறைந்து கிடக்கிறது. உலகில் வாழ முடியாத அளவுக்குப் பிரச்சினைகள் பின்னிப் பிணைந்து பற்றிப் படர்ந்து கிடக்கிறது. மனிதர்கள் வாழ்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். திணறித் திமிறிக் கொண்டிருக்கிறார்கள். கடவுளே நெருக்கடியான சூழல்கள் மாறி அமைதியான சூழலைத் தாரும் என்று மனிதர்கள் இறைவேண்டல் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற போர்கள் அடுத்த உலகப்போரை உருவாக்குமோ என்கிற கேள்விகள் பல எழுந்துள்ளன.

ஆயுதக் குவிப்புகளும், அணுக்குண்டு கலாச்சாரமும், இன்று உலக அமைதியைச் சீரழித்து வருகின்றன. இதனால் உலகப்புவி வெப்பமாதல் பிரச்சினையை எதிர்கொள்ள முடியாமல் எதிர்நீச்சல் போட

வேண்டிய நிலை உருவாகி இருக்கிறது. படைப்புகள் பேறுகால வேதனையுற்றுத் தவித்து, தத்தளித்துக் கொண்டிருக்கிறது. மனித உயிர்கள் எப்படி உயிரைக் காத்துக்கொள்வது, அமைதிக்கான வழி என்ன? என்ற பல வேதனைகளால் வெந்து கொண்டிருக்கிறது. இதற்கு எதிர்வினையாற்ற முடியாமல் இன்று திருஅவைத் தலைவர்களும் திணறிக் கொண்டிருப்பதைப்போல் தோன்றுகிறது. தற்போதைய நிலைமையைச் சமாளிக்க முடியாமல் உலக நாட்டுத் தலைவர்கள் உரையாடலோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

ஒரு பேரழிவு நடப்பதற்கு முன்னால் யோசித்து, சுவாசித்து, உள்வாங்கி அது நடக்கக் கூடாது என்கிற திட்டங்களோடும், நல்ல மனநிலையோடும் செயல்பட்டால் மட்டுமே அமைதி பிறக்கும். அகிலம் வாழும். இல்லையேல் தான்மை பிரச்சினைகளால் யார் பெரியவர்? என்ற போட்டியால் உலகமே அழிந்து விடும் என்பது பழைய வரலாறு கூறும் உண்மை. குறிப்பாக இரண்டாம் உலகப்போரின்போது ஜப்பான் ஹிரோசிமா, நாகசாகியில் அணுக்குண்டை வீசியது. பேரழிவை ஏற்படுத்திய இந்நிகழ்வு இன்னும் மக்கள் மனங்களில் காயத்தையும், கஷ்டத்தையும் உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது. இப்படி செய்திருக்கக்கூடாது என்று ஜப்பான் மட்டுமல்ல உலக நாடுகளே உச்சரித்ததோடு எச்சரிப்பையும் கொடுத்தது.

ஆனாலும் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்கள் அடுத்த அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. ஈரான் போர் (அமெரிக்கா - இஸ்ரேல் - ஈரான் கூட்டு மோதல்) சர்வதேச மோதலாக உருவெடுத்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஹார்முஸ் நீரிணை பகுதியில் கடுமையான ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. ரஷ்யா - உக்ரைன் போர் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. உக்ரைனின் டொனெட்ஸ்க் மற்றும் சப்பொரிஷின் போன்ற கிழக்குப் பகுதியில் கடுமையான சண்டைகள் தொடர்கின்றன. இஸ்ரேல் - ஹமாஸ் மற்றும் லெபனான் மோதல்கள் தற்போது நிறுத்தப்பட்டிருந்தாலும் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் சிரியா எல்லைகளிலும் இஸ்ரேல் ராணுவம் தீவிரம் காட்டி வருகிறது. ஏமானின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் இஸ்ரேல் மீது நடத்தும் தாக்குதல்களுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் படைகள் செங்கடல் பகுதியில் எதிர் நடவடிக்கை செய்து வருகின்றன.

மேலும் சூடான் உள்நாட்டுப்போர், மியான்மர், உள்நாட்டுப்போர், காங்கோ ஜனநாயகக் குடியரசு சிரியா மற்றும் ஏமன் உள்நாட்டுப் போர்கள் மற்றும் எல்லை மோதல்களின் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லை மோதல்கள் ஆப்பிரிக்காவின் சஹேல் பகுதி போன்ற நாடுகளில் தீவிரவாதக் குழுக்களின் அதிகார மோதல்களாலும் இராணுவ ஆட்சிகளாலும் கடுமையான வன்முறைகளும், போர்களும் நடை பெற்று வருகின்றன. இச்சூழலில் அகிம்சை ஆள வேண்டும், அமைதிப்புறா பறக்க வேண்டும் என்பது சாத்தியமாகுமா? நிச்சயம் சாத்தியமாகும். உரையாடுவோம் உறவில் பயணிப்போம் என்கிற விருதுவாக்கை எடுத்துப் பயணித்தால் அனைத்தும் சாத்தியமே.

போர்களையும், தீவிரவாதங்களையும் விடத் தற்போது உலக நாடுகள் சந்திக்கும் புவிவெப்பமயமாதல், கால நிலை பருவ மாற்றங்கள், காற்று, நீர் மாசுபாடு, போன்றவற்றால் அமைதியை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றோம். ஆப்பிரிக்கா போன்ற பின்தங்கிய நாடுகள் இன்றும் வறுமையாலும், நோயாலும், அடிப்படை வசதிகளின்றியும் அமைதியை இழந்து வருவது வேதனையிலும் வேதனையைத் தருகிறது. எனவே அமைதி நிலவ உழைப்போம், இணைந்து குரல் கொடுப்போம், இணக்கமான சூழலை உருவாக்குவோம்.

போர்களும், பகைகளும், தீவிரவாதங்களும் இல்லாத சமூகத்தை கட்டமைக்கும் நோக்கத்தோடு இணைந்து உழைப்போம். உலக நாடுகள் அனைத்திலும் இணைந்து, ஐக்கிய நாடுகளோடு சேர்ந்து இன்னும் பல அமைதிக்கான தளங்களை உருவாக்க முயற்சிகள் எடுப்போம். நாம் நமக்குள்ளே இரக்கம், கருணை, மனித நேயம், மத நல்லிணக்கம், சகிப்புத்தன்மை போன்ற விழுமியங்களை விதைப்போம். வன்முறை நன்முறைக்குத் தீர்வாகாது என்பதைத் தீர்க்கமாய் அடுத்த தலைமுறைக்குச் சொல்லிக் கொடுப்போம். போர்களுக்குக் கொள்ளி வைப்போம். பகைகளைத் தள்ளி வைப்போம். அகிம்சை ஆளட்டும், அமைதிப்புறா பறக்கட்டும்.

# அன்னையின் அருள்மாலை

## ஜெபமாலை

அருள்பணி. **மைக்கேல் ராஜ்**

ஜெபமாலை ஓர் அருள்மாலை. நம் நம்பிக்கையின் மணி மாலை. ஜெபமாலை என்பது இயேசுவின் வாழ்க்கை, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை இறைஅன்னையோடு இணைந்து தியானிக்கும் ஒரு சிறந்த கிறிஸ்தவ இறைவேண்டல்.

அக்டோபர் மாதம் என்றாலே கத்தோலிக்கக் குடும்பங்களில் ஜெபமாலை செய்கின்ற பழக்கம் உண்டு. இந்த மாதத்தின் முத்தாய்ப்பாக, அக்டோபர் 7ஆம் நாள் புனித ஜெபமாலை அன்னைத் திருவிழாவை சிறப்பாகக் கொண்டாடுகிறோம்.

ஜெபமாலை என்பது வெறும் பக்திமுயற்சி மட்டுமல்ல. இது பல நூற்றாண்டுகளாகத் திருச்சபையின் அருள் வாழ்வில் வேரூன்றி வளர்ந்த ஒரு வலிமையான இறைவேண்டல். அன்னை மரியாவின் துணையோடு இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் மறையுண்மைகளைத் தியானிக்கச் செய்யும் இந்த இறைவேண்டல், எண்ணற்ற குடும்பங்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும், அமைதியையும் வழங்கி வருகிறது.

**தொடக்க கால வரலாறு**

மரியன்னையைப் போற்றும் இறை வேண்டல்களும், இயேசுவின் வாழ்க்கையைத் தியானிக்கும் பக்தி முயற்சிகளும் திருச்சபையின் தொடக்க காலத்திலிருந்தே காணப்படுகின்றன. ஜெபமாலை ஒரே நாளில் உருவான ஜெபமுறை அல்ல. தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இறைவார்த்தையைத் தியானித்து, திருப்பாடல்களைச் செபித்து, தொடர்ந்து இறைநினைவில் வாழ முயன்றனர். குறிப்பாக, துறவற வாழ்வில் இருந்தவர்கள் தினமும் பல்வேறு ஜெபங்களைச் செபிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

காலப்போக்கில், கல்வியறிவு இல்லாத பொதுமக்களும் துறவிகளின் ஜெப வாழ்க்கையைப் பின்பற்ற விரும்பினர். திருப்பாடல்களை முழுமையாக வாசிக்க முடியாதவர்கள், 150 திருப்பாடல்களுக்கு மாற்றாக 150 “அருள்நிறைந்த மரியே” என்ற இறைவேண்டலைச் சொல்லும் வழக்கத்தைப் பின்பற்றினர். இதன் மூலம் ஜெபமாலையின் ஆரம்ப வடிவம் படிப்படியாக உருவெடுத்தது. பிற்காலத்தில் அன்னை மரியாவின் வாழ்க்கையையும், இயேசுவின் வாழ்வில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளையும் தியானிக்கும் முறையுடன் இந்த ஜெபம் இணைக்கப்பட்டது. இவ்வாறு ஜெபமாலை வெறும் வார்த்தைகளின் தொகுப்பாக இல்லாமல், இயேசுவின் வாழ்க்கையைத் தியானிக்கும் ஒரு ஆன்மிகப் பயணமாக வளர்ந்தது.



புனித டொமினிக் மற்றும் டொமினிக்கன் சபையினர் ஜெபமாலைப் பக்தியின் பரவலுக்கு முக்கியப் பங்கு வகித்ததாகக் கத்தோலிக்க மரபு கூறுகிறது. அதேவேளையில், வரலாற்று ஆய்வுகளின்படி, இன்றைய ஜெபமாலை பல நூற்றாண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்து அதன் தற்போதைய வடிவத்தைப் பெற்றிருக்கிறது என்பதுதான் உண்மை. காலப்போக்கில் ஜெபமாலைப் பக்தி ஐரோப்பா முழுவதும் பரவியது, பின்னர் உலகெங்கும் கத்தோலிக்க மக்களின் அன்புக்குரிய பக்தியாக மாறியது.

புனித ஜெபமாலை அன்னைத் திருவிழாவின் வரலாற்றில் 1571ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் நாள் மிகவும் முக்கியமானதாகும்.

அந்தக் காலத்தில் மத்தியதரைக் கடல் பகுதியில் ஒட்டோமன் பேரரசுக்கும் கிறிஸ்தவ நாடுகளின் கூட்டணிக்கும் இடையே கடுமையான மோதல்கள் நடைபெற்றன. 1571 ஆம் ஆண்டு அக்டோபர் 7 அன்று, கிரேக்கத்தின் மேற்குக் கரைக்கு அருகிலுள்ள லெபாண்டோ பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கடற்போர் நடைபெற்றது.

கிறிஸ்தவக் கூட்டணிப் படைகள் போருக்குச் சென்றபோது, பல இடங்களில் மக்கள் ஒன்றுகூடி ஜெபமாலை ஜெபித்து அன்னை மரியாவின் பரிந்துரையை நாடினர். அந்தப் போரில் கிறிஸ்தவக் கூட்டணிக்கு வெற்றி கிடைத்தது. அந்த வெற்றியை ஜெபமாலை அன்னையின் பரிந்துரையுடன் இணைத்து நினைவுகூரும் வகையில், திருத்தந்தை புனித 5-ம் பயஸ் அவர்களின் காலத்தில் ஜெபமாலை அன்னையின் திருவிழாவுக்குச் சிறப்பான முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இவ்வாறு அக்டோபர் 7ஆம் நாள், ஜெபமாலையின் வல்லமையையும், அன்னை மரியாவின் பரிந்துரையையும் நினைவுகூரும் நாளாக திருச்சபையின் வரலாற்றில் நிலைபெற்றது.

### திருத்தந்தையர்களும் ஜெபமாலையும்

ஜெபமாலைப் பக்திமுயற்சிக்குப் பல திருத்தந்தையர்கள் சிறப்பான முக்கியத்துவம் அளித்துள்ளனர். குறிப்பாக, திருத்தந்தை பதிமூன்றாம் லியோ, ஜெபமாலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பல மறையுரைகளையும், திருத்தூது மடல்களையும் வெளியிட்டார். அக்டோபர் மாதத்தை ஜெபமாலை மாதமாகக் கொண்டாடும் மரபு மேலும் வலுப்பெறவும் அவர் வழிவகுத்தார்.

பின்னர் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், 2002ஆம் ஆண்டு “கன்னி மரியாவின் செபமாலை” என்ற திருத்தூது மடலை வெளியிட்டு ஜெபமாலையின் ஆன்மீக ஆழத்தை எடுத்துரைத்தார். அதே காலகட்டத்தில் அவர் ஒளி மறையுண்மைகளை அறிமுகப்படுத்தினார்.

### பாத்திமா காட்சியில் ஜெபமாலை ஜெபிக்க அழைப்பு

ஜெபமாலைப் பக்தியின் வரலாற்றில் 1917 ஆம் ஆண்டு பாத்திமா நிகழ்வுகள் மிக முக்கியமானவை.

ஜெபமாலைப் பக்தியின் வரலாற்றில் 1917 ஆம் ஆண்டு பாத்திமா நிகழ்வுகள் மிக முக்கியமானவை.

போர்ச்சுக்கல் நாட்டின் பாத்திமாவில் அன்னை மரியா சிறார்களுக்குத் தோன்றி, உலகிற்காக ஜெபிக்கவும், மனமாற்றம் பெறவும், தவம் செய்யவும் அழைப்பு விடுத்தார். குறிப்பாக, தினமும் ஜெபமாலை ஜெபிக்குமாறு அன்னை அழைத்தார். மனித வரலாற்றில் போர்களும், வெறுப்பும், அச்சமும் நிறைந்த காலக்கட்டத்தில் அன்னையின் செய்தி மிகவும் எளிமையானதாக இருந்தது. ஜெபியுங்கள், மனமாற்றம் பெறுங்கள், இறைவனை நோக்கித் திரும்புங்கள். இச்செய்தி இன்று நம்மைத் தொடுகிறது.



### ஜெபமாலை தரும் அருள் வாழ்வுச் செய்தி

#### 1. ஜெபமாலை – குடும்பத்தின் அருள் செல்வம்

ஒரு குடும்பம் ஒன்றாக அமர்ந்து ஜெபிக்கும் போது, அந்த வீடு ஒரு சிறிய ஆலயமாகிறது. கணவன், மனைவி தங்கள் வாழ்க்கையை இறைவனிடம் ஒப்படைக்கிறார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்காக வேண்டுகிறார்கள். பிள்ளைகள் தங்கள் எதிர்காலத்தை இறைவனிடம் அர்ப்பணிக்கிறார்கள். இவ்வாறு ஜெபமாலை குடும்பத்தை மட்டும் ஒன்றிணைப்பதில்லை. மாறாக, இறைவனைச் குடும்பத்தின் மையமாக மாற்றுகிறது. ஜெபமாலை வெறும் வார்த்தைகள் அல்ல: வாழ்க்கை மாற்றும் அருட்கருவி. ஜெபமாலையின்

உண்மையான நோக்கம் நமது வாழ்க்கையை மாற்றுவதாகும்.

"அருள்நிறைந்த மரியே" என்று சொல்லும் உதடுகள், பிறரைப் பற்றி தீமையாகப் பேசக்கூடாது. "உமது திருவயிற்றின் கனியாம் இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே" என்று சொல்லும் இதயம், ஏழை மற்றும் துன்பப்படுபவர்களைப் புறக்கணிக்கக் கூடாது. இயேசுவின் சிலுவையைத் தியானிக்கும் ஒருவர், தன் வாழ்க்கையில் வரும் சிறு தியாகங்களையும் அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜெபமாலை கையில் இருக்க வேண்டும். அதன் கனிகள் நமது வாழ்க்கையில் தெரிய வேண்டும்.

**ஜெபமாலை கிறிஸ்துவைத் தியானிக்கும் இறைவேண்டல்**

ஜெபமாலை என்பது மரியாவிடம் மட்டும் பேசும் இறைவேண்டல் அல்ல. அது இயேசுவின் வாழ்க்கையைத் தியானிக்கும் ஒரு நற்செய்தி சார்ந்த இறைவேண்டலாகும். பாரம்பரியமாக மகிழ்ச்சி மறையுண்மைகள், துயர மறையுண்மைகள் மற்றும் மகிமை மறையுண்மைகள் ஆகியவை தியானிக்கப்பட்டன. பின்னர் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால், ஒளி மறையுண்மைகளை அறிமுகப்படுத்தினார்.

மகிழ்ச்சி மறையுண்மைகள் இயேசுவின் பிறப்பையும் குழந்தைப் பருவத்தையும் நமக்கு நினைவூட்டுகின்றன. துயர மறையுண்மைகள் இயேசுவின் பாடுகளையும் சிலுவை மரணத்தையும் தியானிக்கச் செய்கின்றன. மகிமை மறையுண்மைகள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வெற்றியையும் பரலோக மகிமையையும் எடுத்துரைக்கின்றன. ஒளி மறையுண்மைகள் இயேசுவின் பொது வாழ்வையும் அவருடைய போதனைகளையும் நினைவூட்டுகின்றன. இதனால் ஜெபமாலை என்பது இயேசுவின் வாழ்க்கையை மரியாவின் கண்களால் தியானிக்கும் இறைவேண்டல் ஆகும்.

**புனித ஜெபமாலை அன்னையின் விழா விடுக்கும் அழைப்பு**

1. இறைவேண்டல் சக்தி வாய்ந்தது. மனிதனால் தீர்க்க முடியாத பிரச்சினைகளையும் இறைவனிடம் ஒப்படைத்து நம்பிக்கையுடன் ஜெபிக்க வேண்டும் என்பதை ஜெபமாலை நினைவூட்டுகிறது.
2. இயேசுவை மையமாகக் கொண்ட வாழ்க்கை. ஜெபமாலையின் ஒவ்வொரு மறையுண்மையும் இயேசுவின் வாழ்க்கையை நமக்கு முன்வைக்கிறது. எனவே ஜெபமாலை நம்மை இயேசுவுடன் நெருக்கமாக இணைக்கிறது.
3. குடும்ப ஒற்றுமை. குடும்ப உறுப்பினர்கள் ஒன்றாக அமர்ந்து ஜெபமாலை செபிக்கும் போது, குடும்பத்தில் அன்பு, மன்னிப்பு, ஒற்றுமை மற்றும் இறைநம்பிக்கை வளர்கிறது. "கூடி இறைவேண்டல் செய்யும் குடும்பம் ஒருபோதும் குலையாது". "கூடி இறைவேண்டல் செய்தால் கோடி நன்மை கிடைக்கும்".

**நிறைவாக...**

ஜெபமாலை நம்மை மரியாவிடம் அழைத்துச் சென்றாலும், மரியா நம்மை இறுதியில் தன் மகனாகிய இயேசுவிடமே அழைத்துச் செல்கிறார். இது இயேசுவின் வாழ்க்கையைத் தியானிக்கும் ஆன்மிகப் பயணம்.

அன்னை மரியா நம் கைகளைப் பிடித்து, நம்மைத் தன் மகன் இயேசுவிடம் அழைத்துச் செல்லட்டும். அவரது வாழ்க்கையைப் போல பணிவுடன் வாழவும், அவரது நம்பிக்கையைப் போல உறுதியுடன் நிற்கவும், அவரது அன்பைப் போல பிறருக்காக வாழவும் நமக்கு அருள் பொழியட்டும்.

இன்றைய குடும்பங்களிலும் சமூகத்திலும் அமைதி, அன்பு, மன்னிப்பு மற்றும் இறைநம்பிக்கை வளர வேண்டுமெனில், ஜெபமாலை ஒரு எளிய ஆனால் ஆழமான ஆன்மிகப் பாதையாக இருக்க முடியும். ஆகவே அக்டோபர் 7ஆம் தேதி ஜெபமாலை அன்னையின் திருநாளைக் கொண்டாடும் நாம், மரியாளின் அழைப்பை ஏற்று, தினமும் ஜெபித்து, இயேசுவின் நற்செய்தியை வாழ்வில் செயல்படுத்துவோம்.

"ஜெபமாலை மூலம் மரியாவுடன் சேர்ந்து இயேசுவை நோக்கிப் பயணிப்போம்."



# மனநலமே நம் வாழ்வின் முழுநலம்

அருள்முனைவர் J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்

**அறிமுகம்**

"நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்கிறோம். "நலமாக இருக்கிறேன்" என்று ஒருவர் புன்னகைக்கிறார். ஆனால் அந்தப் புன்னகைக்குப் பின்னால் கண்ணீர் இருந்தால்? அவரது வார்த்தைகளைக் கேட்க நாம், அவரது மௌனத்திற்குச் செவிகொடுத்திருக்கிறோமா?

உடலின் காயம் தெரிகிறது; மனத்தின் காயம் எப்போதும் தெரிவதில்லை. அது கண்ணீராக, கோபமாக, தூக்கமின்மையாக, தனிமையாக அல்லது புன்னகைக்குப் பின்னால் மறைந்த வலியாக வெளிப்படலாம். மனம் நலமாக இருந்தால்தான் மனிதர் தன்னை உணரவும், உறவுகளைப் பேணவும், சவால்களை எதிர்கொள்ளவும், விழுந்தாலும் மீண்டும் எழவும் முடியும். மனநலமே நம் வாழ்வின் முழுநலம்.

ஒவ்வொரு வாழ்வனுபவத்திற்குள்ளும் ஒரு கதை இருக்கிறது. ஒவ்வொரு கதைக்குள்ளும் செவிகொடுக்கப்பட வேண்டிய ஒரு மனிதக் குரல் இருக்கிறது. எனவே செவிகொடுப்போம், புரிந்துகொள்வோம், அக்கறைகொள்வோம், உடனிருப்போம், செயல்படுவோம் மாற்றம் கொணர்வோம்!

**மனநலமே மனித வாழ்வின் அடித்தளம்**
**வெளியில் தெரியும் மனிதர் உள்ளே வாழும் மனிதர்**

ஒரு மரத்தின் கிளைகள், இலைகள், கனிகள் தெரிகின்றன. அதை தாங்கும் வேர்கள் தெரிவதில்லை. மனித வாழ்வும் அப்படித்தான். படிப்பு, பதவி, சாதனை, புன்னகை தெரிகின்றன. ஆனால் அவற்றை உள்ளிருந்து தாங்கும் மனம் தெரிவதில்லை. வேர்கள் நலமாக இருந்தால் தான் மரம் செழிக்கும் மனம் நலமாக இருந்தால் தான் வாழ்க்கை மலரும்.

மனிதர் உடல், அறிவு, உணர்வு, உறவு, சமூகம், ஆன்மீகம் ஆகியவற்றால் ஒருங்கிணைந்தவர். உடலும் மனமும் ஒன்றை ஒன்று பாதிக்கின்றன. உடல்நலம் வாழ உதவுகிறது; மனநலம் வாழ்க்கையை நிறைவாக வாழ உதவுகிறது. என் உடலின் வலியை கவனிப்பது போல் என் மனதின் வலியையும் கவனிக்கிறேனா? "அழாதே" என்பதற்கு பதிலாக நான் இருக்கிறேன்!

விழுந்து அழும் சிறுவனிடம் "ஆண் பிள்ளை அழக்கூடாது" என்றால் அவன் கண்ணீரை மறைக்க கற்றுக் கொள்கிறான். அதே குழந்தையிடம் "வலிக்கிறதா? சொல்லு நான் உனக்கு செவி கொடுக்கிறேன் நான் உன்னோடு இருக்கிறேன்" என்றால் தனது உணர்வுகளுக்கு மதிப்பு இருக்கிறது வலியை பகிரலாம் தான் தனியாக இல்லை என்பதை அவன் கற்றுக் கொள்கிறான்.

கண்ணீர் பலவீனத்தின் மொழி அல்ல சில நேரங்களில் வார்த்தைகளால் சொல்ல முடியாத மனதின் மொழி மனநலத்தின் முதல் பாடம் மருத்துவமனையில் அல்ல வீட்டில், பெற்றோரின் மடியில் செவி கொடுக்கும் உறவில் தொடங்குகிறது.

**தடுமாறுவது தோல்வியல்ல:**

குடும்பச் சிக்கல், பொருளாதார நெருக்கடி, கல்வி அழுத்தம், வேலை இழப்பு, நோய், பிரிவு, தனிமை போன்றவை மனதை தடுமாற செய்யலாம். அப்போது உனக்கு என்ன ஆயிற்று என்பதற்கு பதிலாக உனக்கு என்ன நடந்தது என்று கேட்பது மனதின் கதவை திறக்கலாம். தடுமாறுவது தோல்வி அல்ல, சோர்வடைவது பலவீனம் அல்ல, உதவி தேவைப்படுவது அவமானம் அல்ல, உதவி கேட்பது மீட்சியின் தொடக்கம்.

**வாழ்வனுபவங்களுக்கு ஆர்வத்தோடு செவி கொடுப்போம்.**
**"கெட்ட மாணவனா?" அல்லது "காயப்பட்ட மாணவனா?"**

பதினைந்து வயது மாணவன் ஒருவன் கோபப்படுகிறான், சண்டையிடுகிறான், படிப்பிலும் கவனம் குறைகிறது, ஒழுக்கமில்லாதவன், பிரச்சினைக்காரன் என்று முத்திரைகள் விழுகின்றன. ஆனால் ஓர் ஆசிரியர் அவன் அருகில் அமர்ந்து உனக்கு

என்ன நடந்தது? நீ சொல்ல விரும்பினால் நான் செவி கொடுக்கிறேன். என்றார்.

முதலில் மௌனம் பிறகு வார்த்தைகள் பின்னர் கண்ணீர, வீட்டில் தினமும் சண்டை, தந்தையின் கோபம், தாயின் கண்ணீர், இரவில் தூக்கம் இல்லை, அப்போதுதான் ஆசிரியருக்கு புரிந்தது. அவன் பள்ளிக்கு எடுத்து வந்தது புத்தகப் பை மட்டும் அல்ல ஒரு குடும்பத்தின் வலியையும் சுமந்து வந்திருக்கின்றான்.

அவன் "கெட்ட மாணவன்" அல்ல காயப்பட்ட மாணவன். இந்த ஆளெ எடுத்துக்காட்டு நமக்கு சொல்லும் பாடம் தெளிவானது. நடத்தையை மட்டும் பார்த்தால் தீர்ப்பளிப்போம் வாழ்வனுபவத்திற்குச் செவி கொடுத்தால் புரிந்து கொள்வோம்.

**அறிவுரைக்கு முன் அக்கறை**

மனம் உடைந்த ஒருவர் பேச தொடங்குவதற்குள் கவலைப்படாதீரகள் மறந்து விடுங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்று அறிவுரை கூறுகிறோம். ஆனால் அவருக்கு முதலில் தேவைப்படுவது தீர்வு அல்ல தொடர்பு. அறிவுரை அல்ல அக்கறை. பதில் அல்ல செவி மடுக்கும் ஒருவர்.

அவசரம் இல்லை மெதுவாக சொல்லுங்கள் நான் உங்களுக்கு செவி கொடுக்கிறேன். நான் உங்களோடு இருக்கிறேன் என்ற சில வார்த்தைகளே மனதின் கதவை திறக்கலாம். கார்ல் ரோஜர்ஸ்(Carl Rogers) வலியுறுத்தியபடி புரிந்து கொள்ளும் மனித உறவு மாற்றத்திற்கான வலிமையான சூழலை உருவாக்குகிறது. கடைசியாக எப்போது ஒருவருக்கு தீர்ப்பிடாமல் முழுமையாகச் செவிகொடுத்தோம்?

**வாழ்வனுபவம் நம்பிக்கையின் குரலாகும்**

மனசோர்வில் இருந்து மீண்டு வந்த ஒருவர் ஒரு காலத்தில் காலையில் எழுவதற்கே அர்த்தம் தெரியவில்லை, இன்று நான் மீண்டு நிற்கிறேன் என்று கூறும் போது இருளில் நிற்கும் இன்னொருவருக்குள் "எனக்கும் ஒரு நாளை இருக்கலாம்" என்ற நம்பிக்கை பிறக்கலாம்.

விக்டர் பிராங்கல் எடுத்துரைத்தது போல் வாழ்வின் பொருளும் நம்பிக்கையும் துன்பத்தை எதிர்கொள்ளும் ஆற்றலோடு ஆழமாக இணைந்திருக்கின்றன. அறிவியல் வலியை காட்டட்டும் வாழ்வனுபவம் அந்த வழிக்கு மனித முகத்தைக் கொடுக்கட்டும். அக்கறைக் குரல்களால் மாற்றம் கொணர்வோம்.

**முத்திரைக்குப் பின்னால் மனிதர மறைந்துவிடக் கூடாது**

அவனுக்கு மனசு சரியில்லை அவள் மனநோயாளி போன்ற முத்திரைகள் மனிதரை அவரது பாதிப்புக்குள் சிறைப்படுத்துகின்றன. ஆனால் மனநல பாதிப்பு ஒருவரின் முழு அடையாளமல்ல. அவருக்கு ஒரு பெயர் இருக்கிறது, ஒரு கதை இருக்கிறது, ஒரு கண்ணியம் இருக்கிறது, ஒரு கனவு இருக்கிறது, ஒரு நாளை இருக்கிறது.

எனவே பாதிப்பைப் பார்ப்பதற்கு முன் மனிதரை பார்ப்போம். தீர்ப்பளிப்பதற்கு முன் வாழ்வனுபவத்திற்கு செவி கொடுப்போம். என் வார்த்தை ஒருவரை உடைக்கிறதா அல்லது உயர்த்துகிறதா என் குரல் காயத்தை ஆழப்படுத்துகிறதா அல்லது நம்பிக்கையை விதைக்கிறதா. அவர்களுக்காக மட்டும் அல்ல; அவர்களோடு மனநல பாதிப்புடன் வாழும் ஒருவரை பற்றி குடும்பம், மருத்துவர், ஆசிரியர், சமூகம் அனைவரும் பேசலாம். ஆனால் அவரது சொந்த குரலே மறக்கப்படலாம். உங்களுக்கு இதுதான் நல்லது என்பதற்குப் பதிலாக உங்களுக்கு எது உதவியாக இருக்கும்? என்று கேட்போம்.

அப்போது சேவை பெறுபவர் பங்காளியாகிறர், அவரது அனுபவம் மதிக்கப்படுகிறது, தனது வாழ்க்கையின் முடிவுகளில் அவருக்கும் இடம் கிடைக்கிறது. அவர்களுக்காக மட்டுமல்ல - அவர்களோடு, அவர்களைப் பற்றி மட்டுமல்ல - அவர்களிடமிருந்து, அவர்களின் குரலின்றி அல்ல-அவர்களின் குரலோடு காயமே ஒருநாள் விளக்காகலாம்.

இருண்ட பாதையில் ஒரு சிறிய விளக்கு முழு பாதையையும் காட்ட வேண்டியது இல்லை. அடுத்த சில அடிகளை பார்க்க உதவினாலே போதும். மீண்டு வந்த ஒருவர் "நானும் அங்கே இருந்தேன் இன்று இங்கே இருக்கிறேன்" என்று சொல்வதும் அத்தகைய விளக்கே. நேற்றைய காயம் இன்றைய ஞானமாகலாம். இன்றைய ஞானம் நாளைய நம்பிக்கையாகலாம். ஒருவரின் நம்பிக்கை மற்றொருவரின் மீட்சிப்பாதைக்கு விளக்காகலாம். அக்கறைக் குரல் தனிமையில் இருப்பவரிடம் நான் இருக்கிறேன் என்றும்.

நம்பிக்கை இழந்தவரிடம் வழி இன்னும் இருக்கிறது என்றும் சொல்லும் குரல் அக்கறை செயலாகும்போது மாற்றம் பிறக்கிறது.

**மனநலம் நம் அனைவரின் பொறுப்பு**

மனநலம் வல்லுநர்களின் அக்கறை அறைக்குள் மட்டும் வாழ்வதில்லை. குழந்தைக்குச் செவிகொடுக்கும் பெற்றோர் மாணவனின் வலியை புரிந்துகொள்ளும் ஆசிரியர் நீ தனியாக இல்லை என்று உடன் இருக்கும் நண்பர் மனிதநேயமான பணியிடம், ஏற்றுக்கொள்ளும் சமூகம் இவை அனைத்தும் மனநலத்தை வளர்க்கின்றன.

மனநலமுள்ள மனிதர்கள் மனநலமுள்ள குடும்பங்களை உருவாக்குகிறார்கள், மனநலமுள்ள குடும்பங்கள் அக்கறையுள்ள சமூகங்களை உருவாக்குகின்றன, அக்கறையுள்ள சமூகங்கள் மனிதநேயம் உள்ள உலகை உருவாக்குகின்றன.

**நமது மனதிற்கும் செவிகொடுப்போம்**

கைப்பேசியின் மின்கலனை நாளில் பலமுறை பார்க்கிறோம். ஆனால் என் மனதின் ஆற்றல் இன்று எவ்வளவு இருக்கிறது? என்று கேட்கிறோமா? நான் உண்மையில் எப்படி இருக்கிறேன்? என்ன கவலை தனியாக சுமக்கிறேன்? எனக்கு ஓய்வு அல்லது உதவி தேவையா? என்று நம்மையே கேட்டுக் கொள்வோம.

**ஒரு அக்கறைச் சொல் ஒரு வாழ்க்கையை தொடலாம்**

நம்மால் எல்லாருடைய பிரச்சனைகளையும் தீர்க்க முடியாது. ஆனால் நான் உங்களுக்குச் செவிகொடுக்கிறேன்; நீங்கள் தனியாக இல்லை; “நான் உங்களோடு இருக்கிறேன்” என்று சொல்ல முடியும். அமைதியாகிவிட்ட குழந்தை, தனிமைப்படும் இளைஞர், கோபத்தில் தவிக்கும் குடும்ப உறுப்பினர், தனிமையே சுமக்கும் முதியவர் இவர்களை அணுகுவோம். சில நேரங்களில் மிகப்பெரிய பரிசு நமது நேரம் மிகப் பெரிய ஆறுதல் நமது உடன் இருப்பு மிகப்பெரிய உதவி நமது செவிமடுத்தல்.

**செவி கொடுத்தோம் இப்போது என்ன செய்வோம்**

வாழ்வனுபவங்களுக்குச் செவி கொடுத்தோம். கண்ணீரை கண்டோம். வலியை உணர்ந்தோம். இப்போது என்ன செய்வோம்? செவிகொடுத்துவிட்டு தனியாக விட்டுவிட்டால் அது முழுமையல்ல புரிந்து கொண்டுவிட்டு செயல்படவில்லை என்றால் மாற்றம் பிறக்காது.

எனவே செவிகொடுப்போம் - புரிந்து கொள்வோம் - ஏற்றுக்கொள்வோம் - உடன் இருப்போம் - உதவி செய்வோம் - பங்கேற்போம் - மாற்றம் கொணர்வம் மாற்றம் பெரிய மேடையில் மட்டும் தொடங்குவதில்லை. ஒரு மனிதர் இன்னொரு மனிதரின் மனதிற்கு இடம் அளிக்கும் அந்த சிறிய நொடியிலேயே மாற்றம் தொடங்குகிறது.

நிறைவாக மலையில் பிறக்கும் சிறிய ஊற்று கற்களையும், பள்ளங்களையும், வளைவுகளையும் கடந்து ஆறாகிறது. சில இடங்களில் அமைதியாக ஓடுகிறது. சில இடங்களில் அருவியாக விழுகிறது. விழுந்தாலும் அது பயணத்தை நடத்துவதில்லை. மனித வாழ்வும் அப்படித்தான்.

காயம், இழப்பு, தோல்வி, தனிமை, மன அழுத்தம் வரலாம். ஆனால் ஒரு காயம் வாழ்க்கையின் முடிவு அல்ல. ஒரு தோல்வி மனிதரின் அடையாளம் அல்ல. ஒரு இருண்ட இரவு விடியல் இல்லை என்பதற்கான சான்று அல்ல. ஒரு மனநல பாதிப்பு மனிதரின் முழு வாழ்க்கையும் அல்ல.

ஒருவர் பேசினால் செவி கொடுப்போம். அழுதால் கண்ணீருக்கு இடமளிப்போம். தடுமாறினால் கையை நீட்டுவோம். உதவி தேவைப்பட்டால் உடனிருப்போம். நம்பிக்கையிழந்தால் ஒரு விளக்கை ஏற்றுவோம். ஒரு நாள் அவர், “நான் உடைந்த போது ஒருவர் என்னை தீர்ப்பிடவில்லை எனக்கு செவி கொடுத்தார் என் கையைப் பிடித்தார் அதனால் நான் மீண்டும் எழுந்தேன்” என்று சொல்ல முடிந்தால் அதுவே மனநல பணியின் வெற்றி!

மனதை மதிப்போம்; மனிதரை நேசிப்போம்; வாழ்வனுபவங்களுக்கு ஆர்வத்தோடு செவி கொடுப்போம்; வலியை புரிந்து கொள்வோம்; தனிமையில் உடனிருப்போம்; நம்பிக்கையை விதைப்போம்; அக்கறைக் குரல்களால் மாற்றம் கொனார்வோம்!



# மனித குலத்தின் அமைதியான புரட்சி

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள சொற்களை இன்னொரு மொழிக்கு எடுத்துச் செல்வது மட்டுமல்ல. ஒரு மனிதனின் உலகத்தை இன்னொரு மனிதனின் உலகுக்குள் அழைத்துச் செல்வதாகும். ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 30 ஆம் தேதி சர்வதேச மொழிபெயர்ப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் மொழிபெயர்ப்பாளர்களின் பாதுகாவலராகக் கருதப்படும் புனித ஜெரோம் (St. Jerome) அவர்களின் நினைவு நாளாகும். கிரேக்கம் மற்றும் எபிரேய மொழிகளில் இருந்த விவிலிய நூல்களை இலத்தீன் மொழியில் கொண்டுவருவதில் அவர் ஆற்றிய பங்கு காரணமாக மொழிபெயர்ப்பு வரலாற்றில் அவர் சிறப்பிடம் பெற்றார். அவர் கி.பி. 420 செப்டம்பர் 30 அன்று மறைந்தார். அவர் இறந்த நாளை முன்னிட்டு International Federation of Translators (FIT) அமைப்பு 1991ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஐ சர்வதேச மொழிபெயர்ப்பு தினமாகக் கொண்டாடத் தொடங்கியது. பின்னர், 24 மே 2017 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானம் 71/288 மூலம் செப்டம்பர் 30-ஐ அதிகாரப்பூர்வமாக சர்வதேச மொழிபெயர்ப்பு தினமாக அறிவித்தது. நாடுகளுக்கிடையிலான தொடர்பு, புரிதல், அமைதி மற்றும் வளர்ச்சியில் மொழிபெயர்ப்பாளர்களின் பங்களிப்பை இத்தீர்மானம் அங்கீகரிக்கிறது. எனவே இந்நாள் மொழிபெயர்ப்பாளர்களைப் பாராட்டுவதற்கான நாள் என்பதைக் கடந்து, மனிதர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள மொழி எவ்வளவு அவசியம் என்பதை நினைவுபடுத்தும் நாள் எனலாம்.

## மொழி என்பது சொற்களின் தொகுப்பு மட்டுமா?

மொழி என்பது அகராதியில் அடுக்கப்பட்ட சொற்களின் கூட்டமல்ல. ஒரு மொழிக்குள் ஒரு மக்களினத்தின் வரலாறு இருக்கிறது, நினைவுகள் இருக்கின்றன, கண்ணீர் இருக்கிறது, கடந்து வந்த பாதைகள் இருக்கின்றன, நம்பிக்கை இருக்கிறது, வழிபாடு இருக்கிறது, வாழ்க்கையைப் பார்க்கும் ஒரு தனித்த பார்வையும் இருக்கிறது. யுனெஸ்கோ அமைப்பும் மொழியை வெறும் தகவல் தொடர்பு சாதனமாக மட்டும் பார்க்காமல், மனிதர்கள் உலகைப் புரிந்துகொள்வதற்கான ஒரு பார்வைக்கண்ணாடி என வலியுறுத்துகிறது. உலகில் ஆயிரக்கணக்கான பேசப்படும் மற்றும் சைகை மொழிகள் உள்ள நிலையில், மொழிப் பன்மைத்தன்மையைப் பாதுகாப்பது என்பது மனித அறிவையும் பண்பாட்டையும் பாதுகாப்பதாகிறது. இதனால்தான் மொழிபெயர்ப்பு கடினமான கலை. உதாரணத்திற்கு "How are you?" என்பதை "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று மாற்றுவது எளிது. ஆனால் ஒரு கவிஞனின் வேதனையை, ஒரு தாயின் பாசத்தை, ஒரு சமூகத்தின் வரலாற்றுக் காயத்தை, ஒரு ஆன்மிக அனுபவத்தை வேறொரு மொழிக்குக் கொண்டு செல்வது வெறும் சொல்லாற்றல் அல்ல. அதற்கு மனித உணர்வு தேவை. ஆகவே, மொழிபெயர்ப்பாளர் இரண்டு மொழிகளை அறிந்தவர் மட்டுமல்ல, இரண்டு உலகங்களுக்கிடையே வாழக்கூடியவர்.

## மொழிபெயர்ப்பு ஏன் அவசியம்?

1. அறிவை அனைவருக்கும் சொந்தமாக்குகிறது: மனித அறிவு ஒரே மொழியில் பிறக்கவில்லை.

அறிவியல் ஓர் இடத்தில் வளர்ந்தது, தத்துவம் வேறோர் இடத்தில் மலர்ந்தது. இலக்கியம் பல்வேறு நாகரிகங்களில் உருவானது. அவை மொழிபெயர்க்கப்படாமல் இருந்திருந்தால், அறிவு எல்லைகளைத் தாண்டியிருக்காது. மருத்துவம், அறிவியல், சட்டம், தொழில்நுட்பம், தத்துவம், இறையியல், இலக்கியம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்குப் பின்னால் தெரியாமல் நிற்கும் மிகப் பெரிய சக்திகளில் ஒன்று மொழிபெயர்ப்பு. அறிவைப் பிறப்பிப்பவர் அறிஞர். அதை எல்லோருக்கும் சொந்தமாக்குபவர் மொழிபெயர்ப்பாளர்.

2. மனிதர்களை நெருக்கமாக்குகிறது : நமக்குப் புரியாத மொழியில் ஒருவர் பேசும்போது முதலில் அவர் நமக்கு அந்நியர். அவருடைய மொழி நமக்குப் புரிந்ததும் அவரது கதையும் புரிகிறது. கதை புரிந்ததும் அவரது வலியும்



புரிகிறது. வலி புரிந்ததும் அவர் அந்நியராகத் தெரிவதில்லை. இதுவே மொழிபெயர்ப்பின் மனிதநேயப் பரிமாணம். ஐக்கிய நாடுகள் அமைப்பும் மொழிபெயர்ப்பு மற்றும் மொழி வல்லுநர்களின் பணியை, நாடுகளை இணைத்து, உரையாடல், புரிதல், ஒத்துழைப்பு மற்றும் உலக அமைதியை வளர்க்கும் முக்கிய சக்தியாகக் குறிப்பிடுகிறது.

3. பண்பாடுகளுக்கு இடையே பாலம் கட்டுகிறது: ஒரு தமிழ் வாசகர் ரஷ்ய இலக்கியத்தை வாசிக்கிறார். ஒரு ஐரோப்பியர் திருக்குறளை அறிகிறார். இந்திய ஆன்மிக மரபு உலகின் பல மொழிகளில் படிக்கப்படுகிறது. உலகின் இலக்கியங்கள் தமிழில் நம்மிடம் வருகின்றன. இங்கே மொழிபெயர்ப்பு ஒரு கதவைத் திறக்கிறது. மொழிபெயர்ப்பு இல்லாத உலகம் பல அறைகளைக் கொண்டிருந்தாலும் கதவுகள் இல்லாத வீடு போன்றது.

4. சிறிய மொழிகளுக்கும் குரல் கொடுக்கிறது : உலகமயமாக்கல் குறிப்பிட்ட சில பிரபலமான மொழிகளுக்கு மிகுந்த அதிகாரத்தை அளிக்கிறது. அதன் மத்தியில் சிறிய மொழிகளின் இலக்கியமும் அறிவும் அழிந்து போகக்கூடிய அபாயம் இருக்கிறது. ஒரு சிறிய மொழியின் கதை மற்ற மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்படும்போது அந்தச் சமூகத்தின் குரலும் உலக அரங்குக்குச் செல்கிறது. ஆகவே மொழிபெயர்ப்பு என்பது சில நேரங்களில் இலக்கியப் பணி மட்டுமல்ல. அது மொழிநீதி (Linguisitc Justice) சார்ந்த பணியாகவும் மாறுகிறது.

**செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மொழிபெயர்ப்பு**

Machine Translation, Natural Language Processing, Speech Recongition போன்ற தொழில்நுட்பங்கள் மிக வேகமாக வளர்ந்து வரும் இன்றைய காலக்கட்டத்தில் மொழிபெயர்ப்பு வரலாற்றின் மிகப்பெரிய திருப்புமுனையில் நிற்கிறது. ஒருகாலத்தில் ஒரு நூலை மொழிபெயர்க்கப் பல மாதங்கள் தேவைப்பட்டது. இன்று செயற்கை நுண்ணறிவு சில வினாடிகளில் பல பக்கங்களை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றுகிறது. இதன் நன்மைகள் மிகப்பெரியவை. ஒரு மாணவர் தனக்குத் தெரியாத மொழியிலுள்ள ஆய்வை உடனடியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. சுற்றுலாப் பயணி அந்நிய நாட்டில் தொடர்புகொள்ள முடிகிறது. ஒரு மருத்துவருக்கும் வேறு மொழி பேசும் நோயாளிக்கும் இடையே முதற்கட்டப் புரிதல்

கிடைக்கலாம். இணையத்திலுள்ள அறிவைக் தாய்மொழியில் பெற முடிகிறது. ஆனால் இதே செயற்கை நுண்ணறிவு "இனி மனித மொழிபெயர்ப்பாளர் தேவையா?" என்கிற புதிய கேள்வியையும் எழுப்புகிறது.

மனித மொழிபெயர்ப்பு என்பது எதற்கும் ஈடாகாது என்பதே உண்மை. உதாரணத்திற்கு, AI ஒரு வாக்கியத்திற்கு அர்த்தம் தரலாம். ஆனால் அதன் பின்னால் இருக்கும் வாழ்க்கை அனுபவத்தை அது எப்போதும் உணராது. AI "சரியான" சொல்லைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் எந்தச் சொல் ஒரு விதவையின் கண்ணீருக்கு மென்மையானது, எந்தச் சொல் ஒரு குழந்தையின் மனதைப் புண்படுத்தும், எந்தச் சொல் ஒரு சமூகத்தின் வரலாற்றுக் காயத்தை மீண்டும் திறக்கும் என்பதைத் தீர்மானிக்க மனிதத் தீர்ப்பு அவசியம். ஒரு இயந்திரம் கேட்கும் கேள்வி: "இந்த வாக்கியத்தின் பொருள் என்ன?" ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளர் கேட்க வேண்டிய கேள்வி: "இந்த மனிதன் உண்மையில் என்ன சொல்ல முயல்கிறான்?" இதுவே இரண்டிற்கும் இடையிலான முக்கிய வேறுபாடு.

AI அனைத்து மொழிகளையும் ஒரே அளவில் கற்றுக்கொள்ளவில்லை. டிஜிட்டல் தரவு மிக அதிகமாக உள்ள மொழிகளில் அதன் திறன் உயர்ந்திருக்கலாம். ஆனால் குறைவான தரவுகள் உள்ள பழங்குடி மக்களின் மொழிகளில் அதன் செயல்திறன் குறையக்கூடும். மொழித் தொழில்நுட்பங்கள் சில ஆதிக்க மொழிகளை மட்டும் மையப்படுத்தினால் ஏற்கனவே உள்ள மொழிச் சமத்துவமின்மை மேலும் பெரிதாகும் என்று யுனெஸ்கோ எச்சரிக்கிறது. தொழில்நுட்பத்தால் மொழிகளைப் பாதுகாக்கவும் முடியும். அதேவேளையில் தவறாக வடிவமைக்கப்பட்டால் அவற்றின் மறைவை வேகப்படுத்தவும் முடியும். எனவே எதிர்காலத்தில் கேட்க வேண்டிய கேள்வி, AI எத்தனை மொழிகளை மொழிபெயர்க்கிறது? என்பதைவிட "AI-யில் யாருடைய மொழிகளுக்கு இடம் கிடைக்கிறது, யாருடைய குரல்கள் மறக்கப்படுகின்றன?" என்பதே!

**எதிர்வரும் காலத்தை எவ்வாறு சந்திப்பது?**

முதலில், தாய்மொழிகளை டிஜிட்டல் உலகில் வலுப்படுத்த வேண்டும். நல்ல தரமான நூல்கள், அகராதிகள், ஒலிப்பதிவுகள், கல்வி வளங்கள் ஆகியவை டிஜிட்டல் வடிவில் உருவாக வேண்டும். இரண்டாவது, AI-யை மொழிபெயர்ப்பாளருக்குப் பதிலாக அல்ல, உதவியாளராகப் பயன்படுத்த வேண்டும். மூன்றாவது, கல்வி நிறுவனங்களில் மொழிபெயர்ப்பு கற்பிக்கும்போது இலக்கியம் மற்றும் இலக்கணத்தோடு AI literacy, fact-checking, ethics, cultural sensitivity போன்ற திறன்களையும் கற்பிக்க வேண்டும். நான்காவது, வெகு குறைவான மக்களே பேசுகின்ற மொழிகளுக்கும் தொழில்நுட்பத்தில் சம வாய்ப்பு வழங்க வேண்டும். ஐந்தாவது, மருத்துவம், சட்டம், மதம், அரசியல், கல்வி போன்ற நுணுக்கமான துறைகளில் மனிதனால் சரிபார்க்கப்படாத செயற்கை நுண்ணறிவு மொழிபெயர்ப்பை இறுதி உரையாக ஏற்றுக்கொள்வதில் மிகுந்த கவனத்துடன் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

வரலாற்றில் சில புரட்சிகள் வாளால் நடந்தன, சில புரட்சிகள் அறிவியலால் நடந்தன. ஆனால் மனித நாகரிகத்தின் மிக அமைதியான புரட்சிகளில் ஒன்று மொழிபெயர்ப்பால் நடந்திருக்கிறது. ஒரு புத்தகம் எல்லையைத் தாண்டியது. ஒரு சிந்தனை மற்றொரு பண்பாட்டைச் சந்தித்தது. ஒரு கவிதை அந்நிய இதயத்தில் கண்ணீரை உருவாக்கியது. ஒரு மறைநூல் புதிய மக்களிடம் சென்றது. ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு உலகின் சொத்தானது. இதற்கெல்லாம் நடுவில் அதிகம் தெரியாமல் ஒருவர் நின்றார். அவர்தான் மொழிபெயர்ப்பாளர். அவர் வெறும் சொற்களைச் சுமப்பவர் அல்ல, அர்த்தங்களைச் சுமப்பவர். அவர் மொழிகளை இணைப்பவர் மட்டுமல்ல, மனிதர்களை இணைப்பவர். செயற்கை நுண்ணறிவு எவ்வளவு வளர்ந்தாலும் ஓர் அடிப்படை உண்மையை நாம் மறக்கக் கூடாது. அதாவது, இயந்திரம் மொழியை மொழிபெயர்க்கலாம். மனிதன்தான் சக மனிதனை ஓரளவுக்கு முழுமையாகப் புரிந்துகொள்வான்.

# முகமறியா உறவுகளின் மானுடம் காக்கும் மனித நேயம்

சகோ. S. ஜூட் மங்கள் ராஜ்
இந்திய தேசிய சபை தலைவர்

**"இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும், சில அறுபது மடங்காகவும், சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன."** (மத்தேயு 13 : 8)

சுயநலம் மிகுந்த உலகில் பிறர் நலம் கருதி முகமறியா மனிதர்களின் துயர் துடைக்கும் உள்ளங்களாய் அருளாளர் பிரடரிக் ஒசானாம் பாதையில் புனித வின்சென்ட் தே பவுல் சபை வழியாயப் பிறரன்புப் பணியாற்றும் வின்செந்திய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் அருளாளர், ஒசானாம் மற்றும் புனித வின்சென்ட் தே பவுல் திருநாள் வாழ்த்துக்கள்.

**பயனுள்ள விதை**

கோவிலின் வாசலில் தேடுவதை விடு, பசியோடிருப்பவனின் முகத்தில் இறைவனைத் தேடு. பிறரன்புப் பணி என்பது கடமையல்ல. மனித நேயத்தின் பிரதிபலிப்பு. அறியாதவர்களின் பசி மற்றும் திக்கற்றவர்களின் துயர் கண்டு உதவிட ஓடும் அன்பு இதயத்தின் உளத்திறப்பு. சாதி, மதம், மொழி, இனம் இவற்றைக் கடந்து மனிதர்களை இணைக்கும் பாலமாம் உறவுகளைக் கடந்த உன்னத பிணைப்பு. பிணைப்பின் பலனாய் விதைக்கப்பட்ட நல் விதையாய் 155 நாடுகளில் பலன் தரும் கனியாய் நிரம்பி நிற்பது இறை இயேசுவின் உடனிருப்பில் அவரோடு இணைந்து பயணிக்கும் அன்புப் பணி , வின்செந்தியப்பணி.

விளம்பரம் வேண்டாம், விதைத்திடு அன்பை, பலன் கருதாமல் செய்யும் உதவி பாரெங்கும் சேர்க்கும் நல் அமைதி. எளியோரின் கண்ணீர் துடைத்திடும் கரங்கள், ஆகச்சிறந்த புனித கூடங்கள்.

**வத்திக்கான் செய்திகள்**

அர்ப்பணத்தோடு ஆற்றும் பணிகள், உலகிற்கும், கலாச்சாரத்திற்கும் திறந்த மனதாய் இருப்பதற்கு மட்டுமல்ல, கடவுளின் இரக்கத்தை வெளிப் படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாகும் என்று கூறினார். நம் திருத்தந்தை பிரான்சிஸ். அனைத்து மதங்களும் அன்பை விதையுங்கள் என்கிறது, அது தானே ஆன்மீகம். ஆன்மீகப் பயணம் பிறரன்புப் பணியைச் கூடுதல் ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் ஆற்ற உதவும் என்கிறார் திருத்தந்தை.

மனித உடன்பிறந்த உணர்வின் நற்செய்தியை, வியப்பு, ஈர்ப்பு, ஆர்வம் ஆகியவற்றை உளம் ஏற்று எப்போதும் வாழ அறிவுறுத்துகிறார். நம்மில் எதிரொலிக்கும் வறியோரின் அழுகுரல், அவர்களில் கிறிஸ்துவின் காயங்களைத் தொட நம்மை உந்தித் தள்ளுகிறது என்கிறார்.

**டிஜிட்டல் சமத்துவமின்மை**

நவீனமான உலகில் பல நன்மைகளைப் பெற்றிருந்தாலும், பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பது திண்ணம். வாடிடும் முகத்தில் புன்னகைப் பூத்தால் வாழும் மனிதமும் வாழும் என்றாலும் நேரடித் தொடர்பின்மை, நேரமின்மை, இல்லங்களின் சந்திப்பின்மை நம்மில் களப்பணியாற்றும் மனிதநேயப் பிணைப்பையும் மனநிறைவையும் குறைத்துவிடுகிறது என்பது உண்மை. நாம் பார்க்கும் பார்வையில் எப்பொழுதும் காணும் நம்பகமின்மை, ஒரு காரியம் குறித்த தாக்கமின்மை,



தங்களை முன்னிலைப் படுத்திக் கொள்ள முனையும் விளம்பர மோகம், அடிமட்ட மக்களை சென்றடையாமை, நவீன தொழில் நுட்பங்களை அறிவதில் இயலாமை ஆகிய தடைக்கற்களை அகற்றிடு, முயன்றிடு எழுந்திடு கருணைச் செயல்கள் தொடரட்டும், மனச்சோர்வுற்றோர்க்கு மழைபோல் பொழியும் பாசம் எழும்பட்டும். கைம்மாறு கருதாமல் நீட்டும் கைகள் கடவுளின் கைகளாய் மாறும், நாம். பகிரும் உணவே உயர்ந்த நல் பூசை, பிறரன்புப் பணியே பேரின்பம் தரும் நல் ஆசை.

**ஒருங்கிணைந்த பிரதிபலிப்பு**

மனிதர்களிடையே அன்பு பெருகும்போது வன்முறைகளும், விரோதங்களும் மறைந்து உலகம் அமைதிப் பூங்காவாக மாறும் என்பதும், துயரத்தில் இருப்பவர்களின் துன்பத்தைத் துடைப்பதே மனித பிறவியின் உன்னதமான நோக்கமென்பதும் சமூக ஒற்றுமையின் அடிப்படைக் காரணிகள்.

"பிறரன்பு ஒரு மலரானால்
சகோதரத்துவம் அதன் நறுமணம்"
- (புனித வின்சென்ட் தே பவுல்).

சாதி, மத பேதமின்றி எல்லோரையும் நேசிக்க சகோதரத்துவம் என்கின்ற தத்துவம் நமக்கு வழிகாட்டுகிறது. முடிந்ததைக் கொடுத்திடு. அதுவே அறத்தின் முன்னேற்பாடு. வாடும் உயிர்க்கு தோள்கொடு, வரலாற்றுப் பக்கத்தில் நிலைத்திடு.

காலத்தின் சூழ்நிலையில் புறக கணிக்கப்பட்டாலும் தரம் மாறாமல் நிலைத்து நிற்கும்போது மூலைக்கல்லாக வாழ்வு பெறுகிறோம். உண்மையானவை எவையோ, நேர்மையானவை எவையோ, நற்பண்புடையவை எவையோ அவற்றுடன் இணைந்து முனைப்புடன் பணி செய்வோம், மாறுவோம் பாறையாய், மனித நேயப் பிறரன்பு மாளிகைக்கு மூலைக்கல்லாய் இருப்போம். அருளாளர். பிரடரிக் ஒசானாமின் ஆன்மீக ஒளிக்கதிரில் உண்மை , சனநாயகம், கல்வியில் பேரார்வம் கொண்டு சமூக நீதி, பிறரன்பு அமைப்பினை உருவாக்குவோம், புனித வின்சென்ட் தே பவுல் நற்பண்புகளைப் பின்பற்றி ஒவ்வொரு மனிதனுக்கும் முழுமையான, நிலையான மகிழ்ச்சியை பெற்றுத்தர வின்செந்தியப் பணியை மேன்மேலும் வளர்ப்போம்.

# அமைதியின் தூதர்களாவோம்

**உங்கள் மனதில் அமைதியினை**
**உள்ளன்புடனே அணியுங்கள்!**
**உங்கள் பணிகள், அமைதியினை**
**உலகில் நிலைக்கச் செய்யட்டும்!**

**இயேசு தந்த அமைதியினை**
**இதயந் தன்னில் இருத்துங்கள்!**
**இயேசு தந்த மகிழ்ச்சியினை**
**என்றும் வாழ்வில் காட்டுங்கள்!**

**அமைதி உள்ள இடத்தினிலே**
**ஆண்டவர் என்றும் குடியிருப்பார்!**
**அமைதி சூழ்ந்த அன்புலகை**
**அறிவால் படைக்க முயலுங்கள்!**

**நானே உலகின் ஒளியென்றார்**
**நானே உலகோர் உணவென்றார்**
**நானே திராட்சைச் செடியென்றார்**
**நானே மேய்ப்பன் என்றாரேசு!**

**தனியொரு மனித அமைதிதான்**
**தந்திடும் குடும்ப அமைதியினை!**
**இனிய சமூக அமைதிவழி**
**இந்த உலக அமைதிவரும்!**

**உன்னைச் செதுக்கி மெருகூட்டு**
**உலகில் அமைதி தானாய்வரும்!**

**தன்னை அறிந்தவன் படைத்தவனை**
**தானே அறிந்து கொள்வானே!**

**தீயதை விட்டு விலகினாலே**
**தூதர் களாவீர் அமைதிக்கு!**
**தூயவர் பாதப் பதிவுவழி**
**துடிப்பாய்ப் பயணம் நீசெல்லு!**

**அல்லும் பகலும் அமைதிக்கு**
**அயரா துழைப்பாய் என்தோழா!**
**சொல்லும் செயலும் நன்றானால்**
**சிறக்கும் இந்த நல்லுலகு!**

**இறைமொழி கற்று முன்னேறு**
**என்றும் நீயே நல்தூதன்!**
**நிறைவாய் வாழ அமைதிவழி**
**நீயும் சென்றிடு மகிழ்வோடு!**

**அரசமைப்புச் சட்டத்தை**
**அமைதி வழியில் காப்பாற்று!**
**அரசு இறைவழி பயணிக்க**
**அன்பின் தூதனாய்ச் செயலாற்று!**

**திருக்குறள் கவிச்செம்மல்**
**அருள்நிதி S.M. செபஸ்டியான்**
தலைவர், குறள்முற்றம்
மாடத்தட்டுவிளை



## திருச்சபை கொண்டாடும்
# வானதூதர்கள்

அருள்பணி. **வ. இரபேல்**

செப்டம்பர் மாதமும் அக்டோபர் மாதத் தொடக்கமும் நாம் காணும் இவ்வுலகைக் கடந்த உலகம் ஒன்றுக்கு நம்மை அழைக்கின்றன. கத்தோலிக்கத் திருச்சபை முதன்மை வானதூதர்களாகிய மிக்கேல், கபிரியேல், இரபேல் ஆகியோருடைய திருவிழாவைச் செப்டம்பர் 29ஆம் நாள் கொண்டாடுகின்றது. இந்த மூன்று வானதூதர்களும் திருவிவிலியத்தில் சொல்லப்பட்டுள்ளனர். அதன்பின், அக்டோபர் 2ஆம் நாள் புனித காவல் தூதர்கள் விழாவைத் திருச்சபை கொண்டாடுகின்றது. நாம் நம்முடைய நம்பிக்கைப் பயணத்தில் ஒருபோதும் தனித்து விடப்படுவதில்லை என்பதை இந்த விழாக்கள் நமக்குச் சொல்கின்றன. கடவுள் தம்முடைய அன்புமிகு பராமரிப்பைத் தம் மக்களுக்கு எப்போதும் தந்துகொண்டே இருக்கிறார் என்பதையும், தம்முடைய தெய்வீகத் திட்டம் நிறைவேறுவதற்காக அவர் தம்முடைய வானதூதர்களை மண்ணுலகிற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார் என்பதையும் இவ்விழாக்கள் நமக்குச் சொல்கின்றன.

வானதூதர்கள் கடவுளால் படைக்கப்பட்ட ஆவிகள். அவர்களுக்குப் புத்தி உள்ளது, தனிவிருப்பும் உள்ளது. அவர்கள் படைக்கப்பட்டதன் நோக்கம் கடவுளைப் போற்றுவதும், அவருக்குத் தொண்டு செய்வதும் ஆகும். அவர்கள் கடவுளின் ஊழியர்களாகவும் தூதுவர்களாகவும் இருக்கிறார்கள் எனவும், மனிதர்களின் வாழ்வு பிறப்புமுதல் இறப்புவரை அவர்களுடைய பராமரிப்புக்கும் பரிந்துரைக்கும் உட்பட்டு இருக்கிறது எனவும் கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி ஏடு உரைக்கிறது. எனவே, திருச்சபை இந்த வானதூதர்களுக்கு வணக்கம் செலுத்துவதோடு, நம்பிக்கையாளர்களின் வாழ்வுக்கு வானதூதர்கள் அருளும் மறைபொருளான உதவிகளை அங்கீகரிக்கவும் செய்கிறது.

### மூன்று தலைமை வானதூதர்கள்

செப்டம்பர் 29ஆம் நாள் திருச்சபை கொண்டாடும் மூன்று முதன்மை வானதூதர்களுக்கும் தனிப்பொறுப்புகள் உள்ளன. இதனைத் திருவிவிலியம் வழியாக நாம் அறிகிறோம்.

### புனித மிக்கேல் - கடவுள் சார்பாகப் போராடுபவர்

மிக்கேல் என்பதற்கு, “கடவுளுக்கு நிகர் யார்?” என்பது பொருளாகும். திருவெளிப்பாடு நூலில் மிக்கேல் விண்ணகப் படைகளுக்குத் தலைவராகக் காட்டப்படுகிறார். அவர் அரக்கப்பாம்புக்கு எதிராகப் போரிடுகிறார். அரக்கப்பாம்பு சாத்தானையும் தீமையின் ஆற்றல்களையும் அடையாளப்படுத்துவது ஆகும்.

இவ்வாறு, நாம் மேற்கொள்ளும் ஆன்மிகப் போராட்டத்தையும், தீமையின்மேல் கடவுள் வெற்றி கொள்வதையும் புனித மிக்கேல் அடையாளப்படுத்துகிறார். நாம் கடவுள் சார்பாக நின்றிடுமாறு புனித மிக்கேலின் செயல் நமக்கு ஊக்கமூட்டுகிறது. அவர் தரும் செய்தி எளிமையானது ஆனால், அது ஆற்றல் மிக்கது. நம்முடைய வாழ்வில் கடவுளுக்கே முதலிடம் தரப்பட வேண்டும் என்பதே அச்செய்தி ஆகும்.

### புனித கபிரியேல் - நற்செய்தி அறிவிப்பவர்

கடவுள் மனிதர் ஆகும் செய்தியைக் கன்னி மரியாவுக்கு அறிவித்திட அனுப்பப்பட்டவராகக் கபிரியேல் தூதரை நாம் அறிவோம். மீட்பரின் அன்னையாக இருப்பதற்கு இறைவனால்



தேர்ந்துகொள்ளப்பட்டதை மரியா இவர் வழியாகவே அறிந்துகொண்டார்.

எனவே, கடவுளின் வாக்குக்குச் செவிமடுத்து, அதற்கு நம்பிக்கையுடன் பதிலிறுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கபிரியேல் தூதர் நமக்கு நினைவூட்டுகிறார். மரியா தாழ்ச்சியுடன்

அச்செய்தியை ஏற்றுக்கொண்டு, “நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார் (லூக் 1:37). கடவுளின் திட்டங்கள் நாம் எதிர்பாரா முறையில் நமக்கு வருகின்றன என்பதையும், நம்பிக்கையினால் நாம் அதற்கு, “ஆம்” எனப் பதில் சொல்ல முடிகிறது என்பதையும் இது காட்டுகிறது.

**புனித இரபேல் - துணையாளரும், குணமளிப்பவரும்**

புனித இரபேல் தோபித்து என்னும் நூலில் முக்கியமாகத் தோன்றுகிறார். அவர் தோபியா மேற்கொண்ட பயணத்தில் உடன்சென்றார். கடவுள் குணமளித்த நிகழ்விலும் பராமரித்த நிகழ்விலும் அவருக்குக் கருவியாகச் செயல்பட்டார். இரபேல் என்பதற்கு, “கடவுள் குணமளிக்கிறார்” என்பது பொருளாகும்.

நம் வாழ்வு என்பதே ஒரு பயணம்தான் என்பதைப் புனித இரபேல் நமக்கு நினைவூட்டுகிறார். சிலநேரம், நாம் செல்லுமிடத்தை நாம் அறிவோம் சிலநேரம் நாம் அதைக் குறித்துத் தெளிவில்லாமலும் அச்சம் கொண்டோராயும் உள்ளோம். நமக்கு வழிகாட்டுதலும், குணமளித்தலும், துணையும் தேவை. புனித இரபேல் இறைவனை நோக்கி நம்மை வழிநடத்துகிறார் இறைவனோ நம் காயங்களைக் குணப்படுத்தி, நம் பாதங்களுக்கு வழிகாட்டுகிறார்.

**காவல் தூதர்கள் - கடவுள் அளிக்கும் தனிப்பட்ட பராமரிப்பு**

காவல் தூதர்கள் குறித்த நம்பிக்கை விவிலியத்தின் அடிப்படையிலும் கிறிஸ்தவத் திருமரபின் அடிப்படையிலும் அமைந்துள்ளது. இயேசுவே சிறுபிள்ளைகள் குறித்துப் பேசுகையில் அவர்களைக் குறிப்பிட்டார்: “இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள்” (மத் 18:10).

காவல் தூதர்கள் குறித்த கருத்தாக்கமானது, கடவுள் தனிப்பட்ட முறையில் நம்மைக் காப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நாம் மறக்கப்படவோ, கைவிடப்படவோ இல்லை. கடவுள் நம்மை அறிவார். அவர் நம்மை அன்பு செய்கிறார், நம்முடைய இவ்வுலகப் பயணத்தில் அவர் எப்போதும் உடன்வருகிறார்.

ஒவ்வொருவருக்கும் ஒரு காவல் தூதர் உள்ளார் என்பதும், ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு காவல் தூதர் உள்ளார் என்பதும் திருமரபு நம்பிக்கை ஆகும். மனிதருடைய இறப்பின்போது வானதூதர்கள் வந்து ஆன்மாக்களை அடுத்த உலகிற்கு எடுத்துச்செல்வார்கள் என்னும் நம்பிக்கை திருச்சபைத் தந்தையர் காலத்திலேயே எழுந்துள்ளது. எடுத்துக்காட்டாக, திருத்தந்தை தெர்த்துல்லியன் என்பவர் ‘தே ஆனிமா’ (53:6) என்னும் நூலில் இதைக் குறிப்பிட்டுள்ளார். அடக்கச் சடங்கின்போது, கோவிலிலிருந்து உடலை எடுத்துச் செல்லுமுன், “வானதூதர்கள் உம்மைப் பேரின்ப வீட்டிற்கு அழைத்துச் செல்வார்களாக!” எனப் பாடப்படுகிறது. திருப்பலியில் மனத்துயர் மன்றாட்டின்போதும் வானதூதரின் பரிந்துரை கோரப்படுகிறது.

**கடவுளில் பற்றுறுதி கொள்ள அழைப்பு**

முதன்மை வானதூதர்களின் திருவிழாவும் காவல் தூதர்களின் விழாவும் உண்மையில் நம்மைக் கடவுளிடம் இட்டுச்செல்கின்றன. வானதூதர்கள் கடவுளின் ஊழியர்களும் செய்தியாளர்களுமாக உள்ளார்கள். அவர்களுடைய உடனிருப்பு என்பது கடவுளின் அன்பின் பெருமையைச் சொல்கின்றன. அவர் தம்முடைய பிள்ளைகளை வழிநடத்தவும், பாதுகாக்கவும், அவர்களுக்குத் துணைநிற்கவும் விருப்பமாக உள்ளார்.

சோதனைகளின்போது நாம் புனித மிக்கேலிடம் பராமரிப்பைத் தேடலாம். நற்செய்தியை அறிவித்திட நமக்குத் துணிவு தேவைப்படுகையில், நாம் புனித கபிரியேலை நாடலாம். நமக்கு நோயிலிருந்து குணமும் வழிகாட்டுதலும் தேவைப்படுகையில் நாம் புனித இரபேலை நாடலாம்.

நம் அன்றாட வாழ்வில் நம்மைக் காக்கும் காவல் தூதரை நாம் நன்றியுடன் நினைவுகூருகிறோம். புனித பெரிய பேசில் என்பாரும் புனித எரோணிமுவும் எழுதியுள்ளபடி, ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்வு முழுவதும் தமக்கு ஆயராகவும் பாதுகாவலராகவும் இருந்திடுமாறு தமது பிறப்பின்போதே காவல் தூதர் ஒருவரைப் பெறுகின்றார். பேய்கள் காவல் தூதரைக் கண்டவுடன் அஞ்சி நடுங்கி ஓடிவிடுகின்றன எனப் புனித ஜான் போஸ்கோ உரைப்பார். அத்துடன், சோதனையின்போது நாம் காவல் தூதரை அழைக்குமாறு அவர் அறிவுரையும் தருகிறார். புனித ஜான் மரிய வியான்னி காவல் தூதரை நமக்கு மிகவும் உண்மையுள்ள நண்பர் என வருணித்தார். ஏனெனில், காவல் தூதர் இரவும் பகலும் நம்மோடு இருக்கின்றார். எனவே. நம்பிக்கையாளர் காவல் தூதரோடு அடிக்கடிப் பேச வேண்டும் என அவர் எழுதியுள்ளார். நாம் நம்முடைய வானதூதர்களை ஆழமாக அன்பு செய்ய வேண்டும். ஏனெனில், அவர்கள் நமக்குத் தற்காலத்தில் பாதுகாவலர்களாகவும், எதிர்காலத்தில் விண்ணகத்து உடன் உரிமையாளர்களாகவும் உள்ளார்கள் எனப் புனித பெர்னார்டு உரைக்கிறார்.



# ஒரு நம்பிக்கையின் பயணம்

பரக்குன்று **சேவியர்**

இன்று ஒரு செய்தியை வாட்சப் மூலமாகவோ, அல்லது வேறு ஏதோ ஒரு டிஜிட்டல் மீடியா மூலமாகவோ வினாடிக்கும் குறைவான நேரத்தில் அனுப்பி விடுகிறோம். ஆனால் ஒரு செய்தியை அனுப்புவது முந்தைய காலங்களில் இவ்வளவு எளிதாய் இருக்கவில்லை !

ஒரு செய்திக்காகக் காத்திருக்க வேண்டும், நடக்க வேண்டும், உழைப்பைச் செலுத்த வேண்டும், சொல்ல வந்த முழு விஷயத்தையும் சுருக்கமாய்ச் சொல்லவேண்டும் என ஏகப்பட்ட சவால்கள் இருந்தன.

மாணவனின் எதிர்காலத்தைக் கடிதமே சுமந்தது! காத்திருக்கும் தந்தையின் ஏக்கத்தைக் கடிதமே அறிந்தது. ஒரு வீரனின் இருப்பைக் கடிதமே ஊர்ஜிதப்படுத்தியது. ஒரு காதலின் பரவசத்தைக் கடிதமே சுமந்தது. இப்படி கடிதங்கள் வெறும் செய்திகளாய் அல்ல, அவை அன்பையும், நம்பிக்கையையும் கட்டி வைத்த பொட்டலங்களாய் இருந்தன.

உலகம் அக்டோபர் 9ம் தியதியை உலக அஞ்சல் தினமாய்க் கொண்டாடுகிறது, இந்தியா அக்டோபர் 10ம் தியதியைக் கொண்டாடுகிறது.

அஞ்சலின் துவக்கமாக ஒற்றர்கள் சுமந்து சென்ற சுருள்களைச் சொல்லலாம். ஆளில்லாச் செய்தித் தொடர்பாகப் புறாக்களின் கால்களில் கட்டப்பட்ட செய்திகளைச் சொல்லலாம். பண்டைய மன்னர்களின் காலத்தில் குதிரை மற்றும் கால்நடை அஞ்சல் முறை பழக்கத்தில் இருந்தது. அலாவுதீன் கில்ஜி மன்னர்தான் 1541ல் குதிரை அஞ்சல் முறையை அறிமுகம் செய்து வரலாற்றில் இடம் பிடித்தவர்.

1774ல் தான் இந்தியாவில் முதல் தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது. அது கல்கத்தாவில் திறக்கப்பட்டது, அதற்கு அன்றைய அரசியல், நிலப்பரப்புக் காரணங்கள் உண்டு. பின் 1786 ல் சென்னையிலும், 1794ல் மும்பையிலும் அலுவலகங்கள் திறக்கப்பட்டன! 1854ல் தான் அஞ்சல் அமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டு அஞ்சல் சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

கடிதம் என்பது ஒரு மனிதனின் உணர்வையும், குரலையும் இன்னொருவருக்குக் கொண்டு சேர்ப்பது. இந்தக் கடிதம் எப்போது சென்று சேரும் என்பதல்ல அன்றைய பிரச்சினை ! இந்தக் கடிதம் சென்று சேருமா? என்பதே முக்கியமான பிரச்சினையாய் இருந்தது. உலக அளவில் இந்த அஞ்சல் அறிமுகம் மாபெரும் புரட்சியாகவே இருந்தது. ஒரு சர்வதேசக் கைகுலுக்கலின் புதிய பயணமாய் இது விரிவடைந்தது.

அதன்பின் அஞ்சல் வெறும் செய்திகளைச் சுமக்கும் வழிமுறை என்பதைத் தாண்டி சேமிப்பு, ஆயுள் காப்பீடு, பணச் சேவை என்று விரிவடைந்தது.



சுதந்திரப் போராட்டக் காலத்தில் அஞ்சல் மிகப்பெரிய பங்காற்றியது. செய்திகள் மக்களைத் தட்டியெழுப்பவும், தேசத்தின் மாற்றத்துக்கான விதையைத் தூவவும் களத்தில் குதித்தன. அடக்குமுறையைத் தாண்டி அஞ்சல் மக்களை ஏதோ ஒரு வகையில் சென்றடைந்து கொண்டே இருந்தது.

டிஜிட்டல் யுகத்தில் அஞ்சலின் தேவை பெருமளவு குறைந்து விட்டது. ஆனாலும் காலத்தோடு பயணிக்கும் அஞ்சல் தன் முகத்தையும் டிஜிட்டல் மயமாக்கிக் கொண்டே பயணிக்கிறது. முந்தைய இன்லெண்ட் காலங்களின் கனவுகளைச் சுமந்தபடி, இன்றைய வாட்சப் காலங்களின் வசதியுடன் பயணிக்கிறது.

இன்றைக்கு இருக்கின்ற அஞ்சல் அலுவலகங்களில் 90 விழுக்காடு கிராமங்களில்தான் இருக்கின்றன. நகர்ப்புறங்களில் அஞ்சல் அலுவலகம் எங்கே இருக்கிறது எனகேட்டால் இன்றைய தலைமுறை தலையைச் சொறியும் என்பது சர்வ நிச்சயம். அவர்களுக்கு இன்லெண்ட் லெட்டர், போஸ்ட் கார்ட், போஸ்ட் கவர், ஸ்டாம்ப் எல்லாம் கற்காலக் கதைகளாய் மாறிவிட்டன.

எனினும் இன்றும் அஞ்சல் அழிந்து விடவில்லை. முன்பெல்லாம் சைக்கிளில் வரும் தபால்காரர்தான் தனிமை வீடுகளின் தெய்வம். அவரது சைக்கிள் மணிச் சத்தத்தைக் கேட்டதும் தலைகள் வீட்டை விட்டு வெளியே வந்து, 'லெட்டர் ஒன்றும் இல்லையா?' எனக் கிராமத்துக் குரலில் விசாரிக்கும். தபால்காரரின் பதிலே அந்த வீட்டில் மகிழ்ச்சியையோ, ஏக்கத்தையோ விதைத்துச் செல்லும்.

கடித வரலாற்றின் பயணம் சுவாரஸ்யமானது. பல நூற்றாண்டுக் காலம் மக்களை இணைத்துக் கட்டிய மாபெரும் அமைப்பு அது. கடிதங்களின் வடிவம் மாறலாம். ஆனால், அவை எதைச் சுமக்கின்றன என்பதை வைத்தே அவற்றின் மதிப்பு அளவிடப்படும்.

இன்றும் என் தந்தை எனக்கனுப்பிய இன்லெண்ட் லெட்டர்கள் என்னிடம் உண்டு. ஆனால் நேற்று நண்பர்கள் அனுப்பிய வாட்சப் செய்திகள் இல்லை. எப்போதேனும் வரும் கடிதங்கள் நமக்கான பொக்கிஷங்களாய் இருந்தன. அவை அன்பின் இதயத்திலிருந்து வார்த்தெடுத்து அனுப்பி வைத்த புதையல்களாய் இருந்தன. கடிதத்தை எழுதி அதை முத்தமிட்டு அனுப்பி வைக்கும் எத்தனையோ நபர்களை நான் பார்த்திருக்கிறேன். அந்தக் கடிதம் எழுத்துகளை மட்டுமல்ல, அவர்களின் உயிரின் பாகத்தையும் சேர்த்தே சுமந்து திரிந்தன.

செய்திகள் அனுப்பும் வழிகள் மாறலாம், ஆனால் அதில் உறைந்திருக்கும் அன்பின் மொழி மாறாமல் இருக்கட்டும். அன்பைப் பதுக்கி வைப்பதல்ல, பகிர்ந்து மகிழ்வதே இறைமகன் இயேசு நமக்குச் சொன்ன பாடம். ஒரு கடிதம் நான் உன்னை நினைக்கிறேன் என்பதை மட்டும் சொல்லவில்லை, நான் உன்னுடன் இருக்கிறேன் என்பதையும் சொல்கிறது.

ஒரு கடிதத்தை அஞ்சல் அலுவலகத்தில் வாங்கி, யோசித்து யோசித்து ஒருவர் ஒருவரைப் பற்றி எழுதி, புன்னகையுடனும், அழுகையுடனும் ஒரு செய்தியை அனுப்ப நாம் நேரம் எடுத்துக் கொண்டோம். பிறருக்காகச் செலவிடும் நேரமே அன்பின் ஆகச் சிறந்த அளவுகோல். பிறரோடு நம் அன்பு உறவும், நட்புப் பரிமாற்றமும் எப்படி இருக்கிறது என்பதை அலச அஞ்சல் அழைப்பு விடுக்கிறது. அன்பின்றி அமையாது உலகு !


# புதிய 'சைக்கோத்தெரபி' டிப்ளோமா பயிற்சி

## மனிதரை வழிநடத்தும் உளநலமுறைகள் பட்டயப் பயிற்சி

## (HUMAN GUIDANCE PSYCHOTHERAPIES DIPLOMA COURSE)

நாம் வாழும் இன்றைய நவீன ஊடக, குடும்ப, சமூகச் சூழ்நிலையில் நாம் அன்றாடம் சந்திக்கும் சவால்கள் மத்தியில் வாழ்வை நிறைவாக, மகிழ்வாக, அமைதியாக வாழும் வகையில் **கோட்டாறு மறைமாவட்ட ஆற்றுப்படுத்துதல் பணியின் ஒருங்கிணைப்பில் ஹோலி கிராஸ் (தன்னாட்சி) கல்லூரியும், அனுகிரகா ஆற்றுப்படுத்துதல் கல்லூரியும், சினேகா மனநல சிகிச்சை மையமும், போதைநோய் நலப்பணியும்** இணைந்து உளநலமுறைகளில் பயிற்சியும் தேர்ச்சியும் அனுபவமும் பெற்றவர்களைக் கொண்டு 21 வகுப்புகள் அடங்கிய 100 மணிநேர பட்டயப் பயிற்சியை நடத்துகிறது. ஆசிரியர், பெற்றோர், தம்பதியர், ஆற்றுப்படுத்துநர், அருட்பணியாற்றுவோர், கல்லூரி மாணவர் என்று எல்லா மனிதரையும் நேர்த்தியாக வழிநடத்தும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள இப்பயிற்சியை முறைப்படி நிறைவுச் செய்பவர்களுக்குப் பட்டயச் சான்றிதழ் (Diploma Certificate) வழங்கப்படும்.

**பயிற்சி சார்ந்த தகவல்**

தொடங்கும் நாள் : **செப்டம்பர் 26, 2026**
நடைபெறும் நாள் : **சனிக்கிழமைதோறும் (21 வாரங்கள்)**
நடைபெறும் நேரம் : **காலை 9.30 முதல் மதியம் 1.00 வரை**
நடைபெறும் இடம் : **ஹோலி கிராஸ் கல்லூரி, நாகர்கோவில்**

**தகவல் தொடர்புக்கு**

அருள்முனைவர் **J. நெல்சன் PhD**
இயக்குநர், ஆற்றுப்படுத்துதல் பணி
ஆயர் இல்ல வளாகம், நாகர்கோவில் - 1
**இயக்குநர் ✆ : 94867 96009**
**பணியகம் ✆ : 94886 11294**

Youtube Channel Counseling Resuorce Network

Website : counselingresuorcenetwork.org



# உறவாடும் முதுமை

முனைவர் ம. **அமலநாதன்**
முதல்வர், நாஞ்சில் கத்தோலிக்கக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, களியக்காவிளை.

**முன்னுரை**

மனித வாழ்க்கை என்பது குழந்தைப் பருவம், இளமைப் பருவம், நடுத்தர வயது மற்றும் முதுமைப் பருவம் என பல்வேறு நிலைகளைக் கொண்டது. அவற்றில் முதுமைப் பருவம் என்பது அனுபவமும் அறிவும் நிறைந்த ஒரு முக்கியமான வாழ்க்கைக் கட்டமாகும். தங்களது வாழ்நாளின் பெரும்பகுதியை குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் அர்ப்பணித்த முதியோர்கள் நமது சமூகத்தின் மதிப்புமிக்க சொத்துகளாக விளங்குகின்றனர். அவர்களின் அனுபவம், அறிவுரை மற்றும் வாழ்க்கைப் பாடங்கள் இளைய தலைமுறைக்கு வழிகாட்டியாக அமைகின்றன.

முதியோர்களின் நலன், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் கண்ணியமான வாழ்க்கை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 1ஆம் தேதி "சர்வதேச முதியோர் தினம்" கடைப்பிடிக்கப்படுகிறது. முதியோர்களை மதித்து, அவர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, அவர்களைச் சமூகத்தின் செயல்பாடுகளில் இணைத்துக்கொள்வதன் அவசியத்தை இத்தினம் நமக்கு நினைவூட்டுகிறது.

**முதியோர் - குடும்பத்தின் அறிவுக் களஞ்சியம்**

ஒரு குடும்பத்தின் வளர்ச்சியிலும், ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திலும் முதியோர்களின் பங்கு அளப்பரியது. அவர்கள் தங்கள் வாழ்நாளில் பெற்ற அனுபவம், அறிவு, பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வாழ்க்கைப் பாடங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்கின்றனர். இன்று நாம் அனுபவிக்கும் பல வசதிகளுக்கும் சமூக முன்னேற்றங்களுக்கும் முந்தைய தலைமுறையினர் ஆற்றிய உழைப்பு முக்கிய காரணமாகும்.

முதியவர்கள் வயது முதிர்ந்தவர்கள் மட்டுமல்ல; அவர்கள் அனுபவத்தின் ஆசிரியர்கள். ஒரு குடும்பத்தில் தாத்தா, பாட்டி ஆகியோரின் அறிவுரைகள் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளை வளர்க்க உதவுகின்றன. அவர்கள் சொல்லும் வாழ்க்கை அனுபவங்கள் பல நேரங்களில் புத்தகங்களில் கிடைக்காத பாடங்களைக் கற்றுத்தருகின்றன. பாரம்பரியக் கலைகள், நாட்டுப்புற அறிவு, குடும்ப மரபுகள், சமூகப் பொறுப்பு போன்றவற்றைத் தலைமுறையிலிருந்து



தலைமுறைக்கு எடுத்துச் செல்வதில் முதியோரின் பங்கு சிறப்பானது.

**மாறிவரும் குடும்பச் சூழலும் முதியோரும்**

முன்னொரு காலத்தில் கூட்டுக் குடும்ப முறையில் முதியோர்கள் குடும்பத்தின் முக்கிய அங்கமாக இருந்தனர். குழந்தைகள், பெற்றோர், தாத்தா, பாட்டி என பல தலைமுறையினர் ஒன்றாக வாழ்ந்தனர். இதனால் முதியோருக்கு அன்பும் பாதுகாப்பும் கிடைத்ததுடன், குழந்தைகளுக்கும் அவர்களுடன் நேரத்தைச் செலவிடும் வாய்ப்பு இருந்தது.

ஆனால் நகரமயமாக்கல், வேலைவாய்ப்புக்காக இடம்பெயர்தல், தனிக்குடும்ப வாழ்க்கை போன்ற காரணங்களால் இன்றைய குடும்ப அமைப்பு மாறிவிட்டது. இதனால் சில முதியோர் தனிமையை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்குப் பொருளாதார உதவியை வழங்குவது மட்டுமே போதுமானதல்ல. அன்பு, உரையாடல், கவனிப்பு மற்றும் மனநிறைவு ஆகியவையும் அவசியம்.

ஒரு நாளில் சில நிமிடங்களாவது அவர்களுடன் அமர்ந்து பேசுவது, அவர்களின் கருத்துகளைக் கேட்பது, அவர்களுடன் உணவருந்துவது போன்ற சிறிய செயல்களும் அவர்களுக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை அளிக்கக்கூடும்.

**சமூக வளர்ச்சியில் முதியோரின் பங்களிப்பு**

முதியோர் சமூகத்திற்குச் சுமை என்ற எண்ணம் தவறானது. அவர்களிடம் இருக்கும் அறிவும் அனுபவமும் சமூக வளர்ச்சிக்கு முக்கியமான வளமாகும். கல்வி, விவசாயம், தொழில், நிர்வாகம், கலை, இலக்கியம், அறிவியல், சமூகச் சேவை போன்ற பல துறைகளில் முதியவர்கள் தங்கள் பங்களிப்பைத் தொடர்ந்து வழங்க முடியும்.

அவர்களின் அனுபவத்தை இளம் தலைமுறையுடன் இணைத்தால் மிகச்சிறந்த பலன்கள் கிடைக்கும். இளைஞர்களின் தொழில்நுட்ப அறிவும் முதியோரின் வாழ்க்கை அனுபவமும் இணையும் போது ஒரு வலிமையான சமூகத்தை உருவாக்க முடியும். எனவே தலைமுறைகளுக்கு இடையிலான தொடர்பை வளர்ப்பது மிகவும் அவசியம்.

**முதியோர் தினத்தின் முக்கியத்துவம்**

சர்வதேச முதியோர் தினம் வெறும் கொண்டாட்ட நாளாக இருக்கக்கூடாது. அது சிந்திக்கும் நாளாகவும் செயல்படும் நாளாகவும் அமைய வேண்டும். முதியோரின் பிரச்சினைகளை அறிந்து, அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நாள் இது.

**நாம் செய்ய வேண்டியது**

முதியோர்களின் நலனுக்காகக் குடும்பம், கல்வி நிறுவனங்கள், அரசு மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். முதியோருக்கான மருத்துவ வசதிகள், பாதுகாப்பான போக்குவரத்து, சமூகப் பாதுகாப்பு, ஓய்வூதியம், பொழுதுபோக்கு மற்றும் சமூகப் பங்கேற்புக்கான வாய்ப்புகள் ஆகியவை மேம்படுத்தப்பட வேண்டும்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே முதியோரை மதிக்கும் பண்பை வளர்க்க வேண்டும். மாணவர்கள் முதியோர் இல்லங்களுக்குச் சென்று அவர்களுடன் நேரத்தைச் செலவிடுதல், அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை அறிதல், தேவையான உதவிகளை வழங்குதல் போன்ற சமூகப் பணிகளில் ஈடுபடலாம்.

**முடிவுரை**

முதியோர் நமது கடந்த காலத்தின் பிரதிநிதிகள் மட்டுமல்ல; அவர்கள் நமது நிகழ்காலத்தின் வழிகாட்டிகளும் எதிர்காலத்திற்கான அறிவுச் செல்வத்தின் பாதுகாவலர்களும் ஆவர். அவர்களைப் பாதுகாப்பது நமது கடமை மட்டுமல்ல; அது நமது பண்பாட்டின் அடையாளமுமாகும்.

“நாம் இன்று முதியோர்களுக்கு அளிக்கும் மரியாதை, நாளை நமக்குக் கிடைக்க வேண்டிய மரியாதைக்கான விதையாகும்.”

எனவே, முதியோரை அன்புடன் அரவணைப்போம்; அவர்களின் அனுபவத்தை மதிப்போம்; அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்; தனிமையிலிருந்து அவர்களை மீட்போம். அனைத்து வயதினரும் கண்ணியத்துடனும் பாதுகாப்புடனும் மகிழ்ச்சியுடனும் வாழக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவதே சர்வதேச முதியோர் தினத்தின் உண்மையான நோக்கமாகும்.

அடுத்த இதழ் “**மனிதம் வாழட்டும் புனிதம் நிலைக்கட்டும்**” என்ற சிந்தனையில் மலர இருக்கின்றது. நமது "புதிய தேடல்" இதழை மெருகூட்டுவதற்கும் வாசகர்கள் எளிதில் படிப்பதற்கும் ஆசிரியரின் வேண்டுகோளுக்கு ஏற்பத் தங்கள் கவிதை, கட்டுரை, கதை, துணுக்குகள், சிந்தனைகளை **1, $1^1/_2$, 2** பக்கத்திற்குள் **02-10-2026**-ம் தேதிக்குமுன், புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சிறந்த படைப்புகள் இதழில் வெளியிடப்படும். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.



# பொதுநிலையினருக்கு வழிகாட்டும் ஒளிச்சுடர்

- குமரி ஆதவன்

ஒரு மனிதர் பூமியில் வாழும்போது என்னென்ன நன்மைகளை உலகத்திற்குச் செய்வாரோ, அவற்றையே அவர் காலத்திற்குப் பின்னாலும் தன் முந்தைய செயல்களின் தாக்கத்தால் செய்துகொண்டிருப்பார். எப்படி இயேசுவின் வாழ்விற்குப் பின்னாலும் அவருடைய செயல்களின் தாக்கம் கிறிஸ்தவத்தை உலகெங்கும் வளர்த்துக் கொண்டிருக்கிறதோ, காந்தி இறந்த பிறகும் காந்தியம் வாழ்ந்து கொண்டிருக்கிறதோ, பெரியார் போன பிறகும் சாதிக் கொடுமைகளுக்கு எதிரான எதிர்ப்புக் குரல் எழுந்து கொண்டிருக்கிறதோ, அப்படித்தான் தேவசகாயம் மனமாற்றம் அடைந்து கிறிஸ்தவத்தை தழுவிச் சாதியத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் எதிராகப் போராடி கொலையுண்டதற்குப் பிறகும், அதன் தொடர்ச்சியால் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தேவசகாயம் கிறிஸ்தவராக மாறிய நிமிடமே சமூகத்தால் ஒதுக்கியும் ஒடுக்கியும் வைத்திருந்த சாதாரண மக்களோடு முழுமையாக இணைந்தார். அவர்களுக்கு விழிப்புணர்வூட்டினார். அவர்களோடு சேர்ந்து சாதி மற்றும் அரசு ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடினார். அந்தப் போராட்டம் ஓரளவுக்கு வெற்றியை தரத்தான் செய்தது. அன்று அவர் மூட்டி வைத்த சாதீய ஒடுக்கு முறைக்கு எதிரான அக்கினிக்குஞ்சு இன்றும் எரிந்தபடியும், ஆதிக்கச் சக்திகளை எரித்தபடியும் தான் உள்ளது. அந்த வகையில் பொதுநிலையினர் முகமாக எழுந்துவந்த புனித தேவசகாயம் அவர்களைப் பொதுநிலையினரின் பாதுகாவலராக அறிவித்தது மிகவும் பொருத்தமானதாகும்.

டிலனாய் மூலம் கிறிஸ்தவத்தின் உள் கூறுகளை கண்டுணர்ந்த நீலகண்டன் தான் தேடிய பொதுச் சமூகத்தின் விடுதலை கிறிஸ்தவத்தின் மூலம் சாத்தியமாகும் என்பதை உணருகிறார். மனிதன் மனிதனை வெறுக்கும் ஆதிக்க மனநிலையை உடைக்க எத்தனிக்கிறார். அந்த எத்தனிப்பின் முதல் அடிதான், உயர் சாதியினர் கிறிஸ்தவம் தழுவக்கூடாது என்ற மன்னரின் ஆணையைத் தூக்கி எறிந்துவிட்டு, கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளுதல். சாதீய மேலாதிக்கத்தை உடைக்கும் முதல் நிகழ்வே அவரது வீட்டில்தான் நடக்கிறது. நம்பூதிரிப் பிராமணர்களுக்கும் அவருக்கும் ஏற்படும் கருத்து மோதல் சாதிப் படிநிலையை உடைக்கத் தொடங்குகிறது. ‘கீழ்ச் சாதியரோடு கலந்து உறவாடிக் கிடக்கும் உன் மடமையை உன்னிடமிருந்து அகற்றி, இந்நாட்டிலிருந்து உன் கிறிஸ்தவ மதத்தை அகற்றும் வரை நான் ஒரு பிராமணன் அல்ல. அதுவரை நான் பூணூலை அணியமாட்டேன்’ என்ற நம்பூதிரியிடம், படிநிலையில் மேல்படியின் குறியீடாக இருந்த பூணூலை, தான் இடுப்பில் கட்டும் அரைஞாண் கொடிக்குச் சமமானது என்று பதிலளித்த தேவசகாயத்தின் கோபத்தின் சொல்லாடல், நிமிடத்தில் முளைத்த வார்த்தைகள் அல்ல. சாதி அகங்காரத்தில், நாயர் குடியில் பிறந்த தன் தாயை அனாதையாக விட்டுச் சென்ற தந்தை வாசுதேவன் நம்பூதிரி மீதான வெறுப்பிலும்,





மக்களை உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பிரித்து வைத்து நடத்திய கொடுமையையும் பல்லாண்டுகள் கண்டு கொதித்தபடி, தனக்குள் அடைகாத்து வைக்கப்பட்டிருந்த ஓர் அக்கினிக்குஞ்சு தன் பயணத்தின் தொடக்கத்தை அறிவித்த விடியலின் பொழுது அது.

1542 இல் சவேரியார் இந்தியாவிற்கு வந்து கிறிஸ்துவை அறிவிக்கத் தொடங்கிய போது, சாதி ஆதிக்கத்தால் நசுங்கிக் கிடந்த மக்கள் ஆண்டவனைத் தொழ ஆலயத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட காலத்தில், சாரை சாரையாக கிறிஸ்தவத்திற்குள் நுழைந்து இறைவனை வழிபட்டனர். இன்றைய குமரி மாவட்டப் பகுதிகளில் மட்டும் சில ஆண்டுகளில் சுமார் 30,000 பேர் சவேரியாரால் கிறிஸ்தவத்தில் சேர்ந்தனர் என்பதற்குப் பலமான ஆதாரங்கள் உள்ளன.

சவேரியாரால் இயேசுவின் வாழ்வை உணர்ந்த பலர் ஆதிக்கவாதிகளை எதிர்க்கிறவர்களாக மாறினர். கிறிஸ்தவச் சமயத்திற்கு மாறாதவர்களும் தாங்கள் ஆலயத்திற்குள் நுழைய 'ஆலய நுழைவு' போராட்டங்களை அறிவித்துப் போராடினர். இது நம்பூதிரிப் பிராமணர்களைக் கலக்கமடைய வைத்தது. தங்களது முதல் படி மதிப்பு, மரியாதை போய்விடுமோ என்று அஞ்சினர். இவர்களுக்கு அடுத்த அடுத்த படிகளில் அமர்த்தப்பட்டவர்களும் கிறிஸ்தவம் நோக்கி பயணித்த போது இந்தக் கலக்கம் மேலும் அதிகரித்தது. அவர்களின் கலக்கத்தை தீர்க்க 1729 இல் வசமாக வந்து கிடைத்தவர்தான் மார்த்தாண்ட வர்மா. நம்பூதிரிகளின் சூழ்ச்சி வலைக்குள் விழுந்த காலகட்டம் சாதீய கொடுமைகள் கோலோச்சிய காலமாக இருந்தது. மக்கள் மீது தலை வரி, மீசை வரி, முலை வரி, திருமண வரி, சடங்கு வரி, சாவு வரி, பனை வரி, கருப்புக் கட்டி வரி, கள் வரி, பால் வரி, வலை வரி, மீன் வரி என 108 வரிகள் போட்டு மக்கள் கொடுமைப்படுத்தப் பட்டார்கள். வரி கட்ட முடியாதவர்களின் மீசை பிடுங்கப் பட்டது; குனிய வைத்து முதுகில் கல் ஏற்றி பல நாட்கள் விட்டனர்; மிளகு பொடி தூவி வெயிலில் நிறுத்தப்பட்டனர்; சாணிக் குழிகளில் இறக்கி விடப்பட்டு வேடிக்கைப் பார்க்கப்பட்டனர். இதனால் தங்கள் வீடுகளையும் நிலங்களையும் போட்டுவிட்டுக் காடுகளுக்குள் தஞ்சமானார்கள் சாதாரண மக்கள்.

உழைப்பாளர்கள் மன்னரால் அல்லது அதிகாரிகளால் கொல்லப்பட்டார்கள். அவன் நிலம் பறிக்கப்பட்டு மன்னர் விரும்பியவர்களுக்கு வழங்கப்பட்டது. இதனைச் 'சாகுடி' என்றனர். சில நேரங்களில் உழைத்தவன் உதைத்து விரட்டப்பட்டான். அவன் நிலம் சிலருக்கு பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டது. இதைப் 'போகுடி' என்றனர். இங்கு எல்லாவற்றிற்கும் ஆம் என்று சொல்லி சம்மதித்தவர்கள் குடியேற்றப்பட்டனர். இதை 'நிறுத்தக்குடி' என்றனர். இவை அனைத்தும் மன்னர்களுக்கு அவ்வப்போது முகம் காட்டிப் போகிற நேசத்திற்குரியவர்களுக்குத் தானமாக வாழங்கப்பட்டன. நம்பூதிரிகள் தங்களைத் தக்க வைத்துக் கொள்ள அமைத்த அல்லது வகுத்த மனுவின் விதிகளை அரசு செயலாக்கியது. மூடத்தனங்களைத் தங்கள் வாழ்வாகவும் கொடுமைகளைச் சாதனைகளாகவும் அரசு எண்ணியது. தீண்டாமை, அடிமைச்சந்தை, வரிக் கொடுமை என மக்கள் துன்புறுத்தப்பட்டனர். இதனால்தான் பிற்காலத்தில் திருவிதாங்கூர் அரசர்களை

'அரக்கர்கள்' என்று வைகுண்டர் வருணித்தார். திருவிதாங்கூர், 'பைத்தியக்காரர்களின் கூடாரம்' என்று சுவாமி விவேகானந்தர் சான்றிதழ் வழங்கினார்.

இத்தகைய கொடுமைகளுக்கு சாவு மணி அடிக்கச் சபதம் பூண்டு, அதற்கு இடமளிக்கிற கிறிஸ்தவத்தைத் தழுவியவர்தான், நம் புனித தேவசகாயம். நம்பூதிரிப் பிராமணர்களின் ஏற்றத் தாழ்வு மிக்கச் செயல்கள் மீது வெறுப்புற்ற நீலகண்டன் திருமுழுக்குப் பெற்று தேவசகாயமாக மாறிய பிறகு இன்னும் அதிகமாக இந்தக் கொடுமைக்கு எதிராகப் போராடவும், குரல் உயர்த்திப் பேசவும், தன்னோடு மற்றவர்களையும் இணைத்துக்கொண்டு இந்த அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் ஆரம்பித்தார். இதனால் நாயர் குடும்பங்களில் விழிப்புணர்வு ஏற்பட்டது. பெருங்கோயில்களில் பூசாரிகள் பக்தர்களைத் தீண்டத்தகாதவராகக் கருதி எட்ட நிறுத்தும் அசிங்கமான போக்குக்கு எதிராகத் தேவசகாயம் போராடினார்; கண்டனக் குரல் எழுப்பினார்.

தேவசாயத்தின் காலத்தில் சாதிப் படிநிலை உச்சத்தில் இருந்தது. வருணாசிரம ஏற்றத்தாழ்வுகளும் அதன் அடிப்படையில் அமைந்த சாதித் தீண்டாமைகளும் திருவிதாங்கூர் மக்களை மிகக்கொடூரமாகக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்த காலம் அது. அன்றைக்குத் திருவிதாங்கூரை ஆண்ட மன்னர்கள் கொடுமையான வரிகளை சுமத்தி, பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொடுமைப் படுத்தி வந்தார்கள். அவர்களுக்கு ஆலய நுழைவு மறுக்கப்பட்டது; கல்வி மறுக்கப்பட்டிருந்தது. அடிமை நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருந்த அவர்களுக்கு விடுதலை கொடுக்க எண்ணிய தேவசகாயம் ஒதுக்கப்பட்ட மக்களை கிறிஸ்தவத்தின் பால் திருப்பினார். இதனால் சாதிய அழுத்தத்திலிருந்து விடுதலை பெற்றதோடு, கடவுளை வழிபடும் உரிமையையும் பெற்றார்கள். அவர் துவங்கி வைத்த சாதிப் படிநிலை உடைப்பு தொடர்ந்து வந்த பல்வேறு சமூகப் புரட்சியாளர்கள் மூலம் தொடர்ந்தது. தேவசகாயம் விதைத்த புரட்சி விதைகள்தான், மக்கள் தங்களை சுய மரியாதை உடையவர்களாக, மானமுடையவர்களாக, அச்சமற்றவர்களாக மாற்றிக்கொள்ள உதவியது.

இது மட்டுமல்ல, தான் பணியாற்றிய பத்மநாபபுரம் அரண்மனையில் ஒவ்வொரு சமூகத்துப் பணியாளர்களுக்கும் வெவ்வேறு வகைகளில் உணவு வழங்கப்பட்டு வந்தது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்றே பட்டையில் (பனை ஓலையில்) கஞ்சி வழங்கப்படும். தேவசகாயம் அவர்கள் அனைவருக்கும் சமபந்தி உருவாக்கிச் சமமான உணவை, சமமான பாத்திரங்களில் வழங்கினார். இது மிகப்பெரும் பிரச்சினையாக்கப்பட்டு, சாதியின் மேலடுக்கில் இருந்தவர்கள் பகைமைகொள்ளும் சூழல் உருவானது. இதனால் உயர்சாதி மேனிலையை அவர் இழக்க நேரிட்டது. இதற்கெல்லாம் அவர் அசைந்து கொடுக்கவில்லை. பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதரும் இறைவன் முன் சமம் என்று வாதிட்டார். சமபந்தி தொடர்ந்தது. அதுபோல் சமூகத்தில் அன்று மிகவும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தவர்களிடமெல்லாம் அன்பு பாராட்டி அவர்களோடு இணைந்து அமரவும் போதிக்கவும் செய்தார். அவர்களோடு உண்டு மகிழ்ந்தார். அவரது ஏழாண்டுக் கிறிஸ்தவ வாழ்க்கையில் கைது செய்யப்படுவதற்கு முன்புள்ள நான்கு ஆண்டுகள் மக்களோடு மக்களாகக் கலந்து வாழ்ந்தார். இந்தக் காலத்தில் மிக வேகமாக மக்கள் கிறிஸ்தவத்தில் கால் பதித்தனர். கடந்த மூன்று நூற்றாண்டுகளாக அவரது பெயரைத்தாங்கியவர்கள் ஏராளம்பேர் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்கிறார்கள் என்பதுதான் அவர் சமூக மாற்றத்தை உருவாக்கினார் என்பதன் அடையாளம்.

தாம் வாழ்ந்த காலத்தில் பொதுநிலையினர் வாழ்வில் ஒளியேற்றிய தேவசகாயம் அவர்கள், இன்றும் இத்தகைய விளிம்பு நிலை மக்களுக்கு விடுதலை அளித்து அவர் தம் வாழ்வில் ஒளியேற்றி வருகிறார். இந்தியாவின் முதல் பொதுநிலையினர் புனிதரான தேவசகாயம் அவர்கள் தாம் உருவாக்கிய புரட்சியின் விதைகள் மூலம் இந்தியப் பொதுநிலையினரை வழிநடத்துகிறார் என்று நம்புவோம். அவர் உலவவிட்ட ஒளிச்சுடர் இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு என்றென்றும் வழிகாட்டட்டும்!

# பெண் குழந்தைகள் சமூக முன்னேற்றத்தின் திறவுகோல்கள்

Dr. C. லதா பேன்ஸி

**முன்னுரை**

"மாங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா "

-கவிமணி தேசிக விநாயகம்

ஒரு குடும்புத்தின் ஒளிவிளக்காகவும், சமுகத்தின் முதுகெலும்பாகவும் திகழ்பவர்கள் பெண் குழந்கைகள். ஒரு பெண் குழந்தையைக் கல்வி பெறச் செய்தால் அது ஒரு தலைமுறையே கல்வி பெறுவதற்குச் சமம். அந்த வகையில் பெண் குழந்தையின் கல்வி என்பது தனிப்பட்ட முன்னேற்றத்திற்கான வழி மட்டுமல்ல சமூகமாற்றத்திற்கான திறவுகோலும் ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 11-ம் தேதி சர்வதேசப் பெண் குழந்தைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது. பெண் குழந்தைகளின் உரிமைகள், பாதுகாப்பு, கல்வி மற்றும் சமவாய்ப்புகள் குறித்து உலகம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

**முன்னேற்றத்தின் தொடக்கம் கல்வி**

பெண் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியே சமூக மாற்றத்தின் அடிப்படை விதையாகும்.

கல்வியறிவு பெற்ற பெண், தன் உரிமைகளை அறிவதுடன் குடும்பத்தின் பொருளாதார நிலைக்கும், ஆரோக்கியத்திற்கும் வலுவான அடித்தளமிடுகிறாள். மூடநம்பிக்கைகள் மற்றும் பாலினப் பாகுபாடுகளை தகர்த்தெறியும் கூர்மையான ஆயுதமாகக் கல்வி விளங்குகிறது.

**"ஒரு பெண் குழந்தைக்குக் கல்வி கற்பிப்பது ஒரு குடும்பத்தை கல்வி கற்பிப்பதற்கு சமம்"**

கல்வி பெண் குழந்தையை தன்னம்பிக்கையுள்ள பெண்ணாக உருவாக்குகிறது. பெண் குழந்தை இன்று பள்ளிக்குச் செல்லும் மாணவி, நாளை ஒரு சிறந்த ஆசிரியராகவோ. மருத்துவராகவோ, விஞ் ஞானியாகவோ, நிர்வாகியாகவோ, தொழிலதிபராகவோ, தலைவராகவோ உருவாகலாம். எனவே பெண் குழந்தைகளின் திறமைகளைக் கட்டுப்படுத்தாமல் அவர்களுடைய கனவுகளுக்கு சிறகுகள் கொடுக்க வேண்டும்.

சமத்துவத்தின் சிறகு

"பெண் குழந்தைகளின் கல்வியே சமத்துவத்தின் முதல் சிறகு"

ஒரு பெண் குழந்கைக்குக் கல்வி வழங்குவது அவளுடைய வாழ்க்கையை மட்டும் மாற்றுவதில்லை. ஒரு குடும்பத்தையும், ஒரு



தலைமுறையையும் மாற்றுகிறது. எனவே ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவது நம் அனைவரின் கடமையாகும்.

"பெண் குழந்தை சுமையல்ல – அவள் சாதனையின் சிகரம்".

**சமூகத்தில் ஏற்படும் முன்னேற்றம்**

பெண் குழந்தைகள் கல்வி பெறும்போது குழந்தைத் திருமணம், பாலினப் பாகுபாடு, வன்முறை மற்றும் சுரண்டல் போன்ற சமூகப் பிரச்சனைகளுக்கு எதிராக விழிப்புணர்வுடன் செயல்பட முடியும்.

ஆண் குழந்தைக்கு வழங்கப்படும் அதே கல்வி வாய்ப்புகளையும், ஊக்கத்தையும் பெண் குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும்.

கல்வி பெற்ற பெண்கள் சமூக முடிவுகளில் பங்கேற்கவும் தங்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் முடியும். இதன் மூலம் சமத்துவமான மற்றும் முன்னேற்றமான சமூகம் உருவாகிறது.

பெண் குழந்தையின் சிரிப்பில் ஒரு குடும்பத்தின் மகிழ்ச்சி இருக்கிறது. அவளுடைய கல்வியில் ஒரு நாட்டின் வளர்ச்சி இருக்கிறது. அவளுடைய வெற்றியில் ஒரு சமூகத்தின் முன்னேற்றம் இருக்கிறது.

**"பெண் குழந்தையின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி"**

அக்டோபர் -11 சர்வதேசப் பெண் குழந்தைகள் தினத்தில் ஒவ்வொரு பெண் குழந்தையின் உரிமையையும் மதித்து, அவளுடைய எதிர்காலத்தை வளமாக்குவோம்.

"பெண் குழந்தைகளின் சிறகுகளை விரிக்கச் செய்வோம்

சமூக முன்னேற்றத்தை நோக்கி பறக்கச் செய்வாம்" :



# புது உலகைச் செதுக்கும் சிற்பிகளும் புது உலகு படைக்கும் சிற்பங்களும்

Dr. அருட்பணி. செ. காட்வின் செல்வ ஜஸ்டஸ்

ஆசிரியப்பணி என்பது அறப்பணி, அதற்கே உன்னை அற்பணி என்பது நம் அனைவருக்கும் தெரிந்த சொல்லாடல். இந்த உலகில் எத்தனையோ விதமான பணிகள் மனித சமூகத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. அனைத்துப் பணிகளுமே இந்த உலகைப் புதுப்படைப்பாக உருவாக்குவதில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. ஆனாலும் ஆசிரியப்பணி இன்னும் முக்கியத்துவம் பெறுகிறது. எழுத்தறிவித்தவன் இறைவன் என்று தமிழ் மரபு நமக்கு சொல்லித்தருகிறது. இறைவனுக்கே நிகரான இடத்தில் ஆசிரியர் வைக்கப்படுகின்றார் என்றால் அவருடைய சிறப்பை நம்மால் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. கோயில் இல்லா இடத்தில் குடியிருக்கவேண்டாம் என்று நம் முன்னோர் நமக்குச் சொல்லித்தந்துள்ளனர். கோயில் நம்மை படைத்த இறைவனை நமக்கு அடையாளப்படுத்துகிறது. கோயில்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களையும் நம் முன்னோர் அமைத்துத் தந்திருக்கின்றனர். அது பள்ளிக்கூடங்களும் ஆசிரியர்களும் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை நமக்கு உணர்த்தி நிற்கிறது. ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்படும்பொழுது பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்பதும் நாம் அறியாத ஒன்று அல்ல.

நமது தாய்த் திருநாட்டில் செப்டம்பர் மாதம் 5 ம் தியதியை நம் முன்னாள் குடியரசுத் தலைவர் மாண்புமிகு சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் நினைவாகக் கொண்டாடி மகிழ்கின்றோம். உலக ஆசிரியர் தினம் அக்டோபர் மாதம் 5ம் தியதி உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அதே நேரத்தில் நவம்பர் மாதம் 17ம் தியதியை அகில உலக மாணவர் தினமாக மாணவர்களை உலகமே கொண்டாடி மகிழ்கின்றது. இரண்டிலுமே தொடர்பும் ஒற்றுமையும் இருக்கின்றது. ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகவும் மாணவர்கள் அந்த வழியில் நடந்து, உண்மையை எவராலும் சாதனையாளர்களாகவும் இருக்கும். இன்றைய கால வகுப்பறை மாணவர்களையும் ஆசிரியர்களையும் இணைந்து பயணிக்க அழைப்பு விடுக்கிறது. ஆசிரியர்மையக் கற்றல் நீங்கி மாணவர்மையக் கற்றல் முறை இன்று நிலவுகிறது. ஒரு மாணவர் எத்தகைய திறமை படைத்தவராக இருக்கின்றார். அவரை இன்னும் கூர்மைப்படுத்த ஆசிரியர் கைக்கொள்ளும் உக்தி என்ன என்பதுதான் இன்றைய கற்றல் முறையாக இருக்கிறது. சுடர்விளக்கே ஆயினும் தூண்டுகோல் வேண்டும் என்பதற்கேற்ப ஓர் ஆசிரியர் தூண்டுகோலாயிருந்து மாணவரை ஒளிரச்செய்கின்றார்.



தான் நினைப்பதையெல்லாம் கற்றுக்கொடுப்பவர் அல்ல இன்றைய நவீன ஆசிரியர், மாறாக ஒரு மாணவரின் கற்றல் திறன் ஆர்வம், தனித்தன்மை ஆகியவற்றை உணர்ந்து அவருக்குள் இருக்கும் ஆற்றலை வெளிக்கொணர ஓர் உந்து சக்தியாக இருப்பவர்தான் இருபத்தொன்றாம் நூற்றாண்டு ஆசிரியர், மாணவரும் ஆசிரியரும்

இணைந்து பயணிக்கும்பொழுது மட்டுமே இது சாத்தியப்படுகிறது. சிற்பி செதுக்க விரும்பினாலும் செதுக்கப்படும் கல் விலகியிருந்தால் அது சிற்பமாவதில்லை. எதிர்காலத்தை வடிவமைக்கும் ஆற்றல் பெறுவதற்கு மாணவர்கள் ஆசிரியர்களோடு அறிவுப்பூர்வமான உரையாடலில் தொடர்ந்து ஈடுபடவேண்டும். தான் கற்றுக்கொள்வது குறித்த கேள்விகளை எழுப்ப வேண்டும். எது சரி எது தவறு எது ஏற்புடையது என தனக்குள்ளே, தங்கள் குழுக்களுக்குள்ளே, தங்கள் ஆசிரியரோடு உயரிய விவாதம் நடத்தும் திறமை படைத்தவராய் தங்களை உருவாக்க வேண்டும். அதற்கு ஆசிரியரும் அதற்குரிய இடம் தருபவராயத் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தங்கள் மாணவர் தோற்பதாய் இருந்தாலும் அந்தத் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறையவே இருக்கிறது என்பதை உணர்த்துகின்ற பொறுப்பு ஓர் ஆசிரியருக்கு நிறைய உண்டு. இந்த உலகை பாதிக்கக்கூடிய காரணிகள், குறிப்பாக உலகம் வெப்பமயமாதல், பல்லுயிர்ப் பெருக்கம் குறைதல், காடுகள் அழிதல், போதிய மழையின்மை, இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றிற்குத் தீர்வு சொல்ல வேண்டிய கடமையும் பொறுப்பும் இன்றைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிகமாய் இருக்கிறது என்பதை யாரும் புறக்கணித்துவிட முடியாது. ஆசிரியர்களைவிட ஒருபடி மேலாகச் சென்று மாணவர்கள் தங்கள் புதுமையான சிந்தனையால் புதிய தீர்வைக் காணும் முயற்சியில் தங்களைப் பாடுபடுத்தவேண்டியது காலத்தின் உடனடித் தேவையாக உள்ளது. வருங்காலச் சந்ததி வாழவேண்டுமென்றால் இன்றைய தலைமுறை புதிய முடிவுகளை எடுத்தாக வேண்டும்.

ஆசிரியர்களே! இன்றைய மாணவர்களின் திறமைகளில் நம்பிக்கை கொள்ளுங்கள், மாணவாகளே! ஆசிரியர்களின் அனுபவத்தையும், ஞானத்தையும் உள்வாங்க உங்கள் மனக்கண்களைச் சற்றே திறந்து பாருங்கள், ஆசிரியர்கள் சிற்பிகள் என்றால் மாணவர்களே, நீங்களே அவர்கள் செதுக்கும் சிற்பங்கள். நாளைய விடியல் புதுமையாய் விடிய உங்கள் அறிவுக்கண்கள் அகலமாயத் திறக்கட்டும் உச்சத்தை நோக்கி!

## Engagements of the Bishop: September 2026

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Diaconate Ordination | Bishop's House | 06.30 am |
| 02 | House Blessing | Kaliakkavilai | 09.00 am |
| | Priests' Personal Board Meeting | Bishop's House | 03.30 pm |
| 04 | Flag Hoisting | Mulagumoodu Basilica | 06.00 pm |
| 06 | Pastoral Visit | Iruthayapuram | 06.00 am |
| 09 | Graduation day – Morning Star College | Chunkankadai | 10.00 am |
| 11 | Flag Hoisting | Vellicode | 06.30 pm |
| 13 | Feast Mass | Munchirai | 09.00 am |
| Sep 14 to Oct 09 | USA Visit | | |

# பணிக்குழுக்களின் சிறப்புச் செயல்பாட்டு அறிக்கைகள்
## குழித்துறை மறைமாவட்டம்

## கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு

### *மறைக்கல்விப் பணிக்குழு*

- மறையாசிரியர்களுக்கான அடிப்படைப் மறைப்பயிற்சியின் (BTCT) 30-ம் பயிற்சி பாசறை ஜூலை மாதம் 4 ஞாயிற்றுகிழமைகளில் உண்ணாமலைக்கடை டிரினிட்டி மேய்ப்புப்பணி பயிற்சி அரங்கில் நடைபெற்றது. 130 பேர் பங்கேற்றனர்.
- 16.08.2026 பணிக்குழுக் கூட்டம் உண்ணாமலைக்கடையில் நடைபெற்றது. 41பேர் பங்கேற்றனர். **நிர்வாகிகளின் பணியும் கடமையும்** குறித்து அருட்பணி ஆன்றூஸ் கருத்துரை வழங்கினார்கள்.
- 08.08.2026 முளகுமூடு, காரங்காடு, வேங்கோடு, மாத்திரவிளை மறைவட்டப் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. 195 பேர் பங்கேற்றனர். **ஆசிரியர் பணி ஓர் அழைப்பு** என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.

### *திருவழிபாடு பணிக்குழு*

- வேங்கோடு மற்றும் மாத்திரவிளை மறைவட்டப் பொதுக்குழு நடைபெற்றது. 41 பேர் பங்கேற்றனர். **இறைவார்த்தை ஏன் வாசிக்க வேண்டும்** என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது.
- பீடச் சிறார் பயிற்சி 26.08.2026 வேங்கோடு மறைவட்ட அளவில் நடைபெற்றது. 177 பேர் பங்கேற்றனர். **பீட சிறாரின் பணிகள்** பற்றி பயிற்சி நடைபெற்றது.

### *விவிலியப் பணிக்குழு*

- 08.08.2026 அன்று மாத்திரவிளை மறைவட்டப் பொதுக்குழு நடைபெற்றது. 13 பேர் பங்கேற்றனர்.

## 2. சிறார் பணிக்குழு

- வேங்கோடு, காரங்காடு, மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. 59 பேர் பங்கேற்றனர்.
- 14.08.2026 களப்பணியாளாகளுக்கு **சிறார்களின் மனநிலையில் அவர்களை வழிநடத்துவது** பற்றி சிறப்பு பயிற்சி நடைபெற்றது. 7 பேர் பங்கேற்றனர்.
- திரித்துவபுரம் மறைவட்ட மண்டல பயிற்சி சூசைபுரம் ஆலயத்தில் வைத்து **உதவும் கரங்கள், நம்பிக்கையின் இதங்கள்** என்ற தலைப்பில் நடைபெற்றது. 204 பேர் பங்கேற்றனர்.

## 2. சமூகத்தொடர்பு பணிக்குழு

- திருத்தந்தை 14 ஆம் லியோ அவர்களின் மகத்தான மானுடம், பாபேல் கோபுரமா? அல்லது எருசலேம் மதில் சுவர்களா? மற்றும் அன்றாட அருள்வாக்கு, இறை ஒளியில் நிறைவாழ்வு, புனிதர் வரலாறு, Poster மற்றும் கத்தோலிக்க பாடல்கள் தயாரித்து தினமும் whatsapp குழுவில் மற்றும் Youtube Channel பகிரப்படுகின்றது. திருப்பலி மற்றும் மறைமாவட்ட நிகழ்வுகளும் நேரலையில் ஒளிபரப்பட்டு வருகின்றது.

## 3. பெண்கள் பணிக்குழு

### *பயிற்சிகள்*

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 05.08.2026 | புத்தன்கடை | அசிசியாரின் பார்வையில் பூமித்தாய் | 75 |
| 12.08.2026 | திரித்துபுரம் | இயற்கை வளங்களை அடுத்த தலைமுறைக்கு விட்டு செல்லும் பெண்கள் | 60 |
| 14.08.2026 | முளகுமூடு | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 50 |
| 19.08.2026 | வேங்கோடு | இயற்கை வளங்களை அடுத்த தலைமுறைக்கு விட்டு செல்லும் பெண்கள் | 96 |
| 24.08.2026 | மாத்திரவிளை | பாலின சமத்துவம் பெண்கள் பாதுகாப்பு | 27 |
| 29.08.2026 | காரங்காடு | சுற்றுச்சூழல் பாதுகாப்பும் பெண்களும் | |
| 27.08.2026 | புத்தன்கடை | அசிசியாரின் பார்வையில் பூமித்தாய் | 75 |
| 12.08.2026 | திரித்துபுரம் | இயற்கை வளங்களை அடுத்த தலைமுறைக்கு விட்டு செல்லும் பெண்கள் | 60 |
| 14.08.2026 | முளகுமூடு | சுற்றுச்சூழல் பாதுகாப்பு | 50 |

- கருத்தாளர் உருவாக்கல் பயிற்சி 08.08.2026 அன்று நடைபெற்றது. 13 பேர் பங்கேற்றனர்.
- 08.2026 அன்று மாநில பயிற்சி டிரினிட்டி அரங்கில் வைத்து **பாலினச் சமத்துவம் பெண்கள் பாதுகாப்புப்** பற்றி நடைபெற்றது. 32 பேர் பங்கேற்றனர்.
- பெண்கள் கூட்டுக்குழு பயிற்சி 06.08.2026 அன்று தக்கலையில் வைத்து **ஏகாதிபத்திய எதிர்ப்பு** என்ற தலைப்பில் நடைபெற்றது. 22 பேர் பங்கேற்றனர்.

## 4. குடும்ப நலப்பணிக்குழு

- திருமணப் பதிவு செய்தவர்கள் : 20
- திருமணப் பயிற்சி பெற்றவர்கள் : 121
- குடும்ப ஆற்றுப்படுத்தல் பெற்றவர்கள் : 3
- கருத்தாளர் தொடர் பயிற்சியில் 15 பேர் பங்கேற்றனர்.

## 5. சிறைப்பணிக்குழு

- 16.08.2026 அன்று கூட்டமாவு பங்கில் மறைக்கல்வி மாணவர் ஆசிரியர்களுக்கு **குற்றமில்லா குமரி** என்ற தலைப்பில் விழிப்புணர்வுப் பயிற்சி நடைபெற்றது. 125 பேர் பங்கேற்றனர்.

## இளைஞர் பணிக்குழு

### பொதுக்குழுக்கள்

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | ப.எ |
|---|---|---|---|
| 16.08.2026 | காரங்காடு | உண்மையான சுதந்திரம் என்ன? | 14 |
| 16-08.2026 | புத்தன்கடை | இயற்கை | 9 |
| 16-08-2026 | முளகுமூடு | இன்றைய காலத்தில் இளைஞர்களின் சுதந்திரம் | 20 |
| 9-08-2026 | வேங்கோடு | ஜென்சி தலைமுறையினரின் விடுதலை | 26 |
| 09.08.2026 | திரித்துவபுரம் | சமூகப் பகுப்பாய்வு | 18 |

- இரண்டாம் கட்ட பயிற்சி ஆகஸ்ட் 18, 19, 20 ஆகிய மூன்று நாட்கள் சிறப்பாக **நடைபெற்றது. சமூகப் பகுப்பாய்வு, இயேசுவின் ஆளுமை, விவிலியப் பகுப்பாய்வு, பாலியல் மதிப்பீட்டுக் கல்வி, ஊடகம் இணையதளம்** ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெற்றது. 12 பேர் பங்கேற்றனர்.

- அறிவுத்திருவிழா 30.08.2026 அன்று புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, திரித்துவபுரத்தில் வைத்து நடைபெற்றது. அறிவுத் திருவிழாவை முன்னிட்டு இளைஞர்களுக்கான பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்நிகழ்வின் மூலம் இளைஞர்களுக்குப் புதிய வாசிப்புப் பழக்கம், அறிவுத்திறன் மற்றும் படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டது. சுமார் 600-க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்

- இ.கி.மா இரண்டாம் கட்டப் பயிற்சியானது ஜூலை 31, ஆகஸ்ட் 1 மற்றும் 2 ஆகிய தினங்களில் சிறப்பாக நடைபெற்றது. இப்பயிற்சியில் மொத்தம் 45 மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

### பொதுக்குழுக்கள்

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 16.08.2026 | காரங்காடு | இட ஒதுக்கீடு, சமூகநீதி | 16 |
| 16-08.2026 | புத்தன்கடை | இயற்கை | 4 |
| 02-08-2026 | முளகுமூடு | மாணவர்களின் சுதந்திரம் | 39 |

| | | | |
|---|---|---|---|
| 16.08.2026 | வேங்கோடு | ஜென்சி தலைமுறையினரின் விடுதலை | 26 |
| 16.08.2026 | திரித்துவபுரம் | இலட்சியம், குறிக்கோள் | 2 |
| 16.08.2026 | காரங்காடு | இட ஒதுக்கீடு, சமூகநீதி | 16 |
| 16-08.2026 | புத்தன்கடை | இயற்கை | 4 |

## தொழிலாளர் பணிக்குழு

- திரித்துவபுரம், காரங்காடு, மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. உழைப்பு என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது. 51 பேர் பங்கேற்றனர்.

## அன்பியப் பணிக்குழு

**பொதுக்குழுக்கள்**

| நாள் | மறைவட்டம் | கருத்தமர்வு | எண் |
|---|---|---|---|
| 01.08.2026 | முளகுமூடு | பணித் திறனாய்வு | 51 |
| 22.08.2026 | காரங்காடு | அசிசியார் வாழ்கிறார் | 52 |
| 23.08.2026 | திரித்துவபுரம் | பணித் திறனாய்வு | 45 |
| 23.08.2026 | வேங்கோடு | மன மகிழ்வு விளையாட்டு | 50 |
| 23.08.2026 | புத்தன்கடை | கலை விழாத் திறனாய்வு | 41 |
| 29.08.2026 | மாத்திரவிளை | திறனாய்வு | 46 |

- 30.08.2026 தழிழக வெள்ளி விழா தயாரிப்பாக அன்பியம் **எதிர்காலத் திருஅவையின் நம்பிக்கை** எனும் சிந்தனையில் டிரினிட்டி மேய்ப்புப் பணி மையத்தில் வைத்துச் சிறப்புப் பயிற்சி நடைபெற்றது. 83 பேர் பங்கேற்றனர்.

**நலஉதவி**

- கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவச் செலவிற்காகப் பங்கு, ஒருங்கிணையம் சார்பாக **ரூ. 4,59,816.00** வழங்கப்பட்டது.

## 7. பட்டியலினத்தார் பணிக்குழு

- புத்தன்கடை, முளகுமூடு, ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழுக்கள் நடைபெற்றது. சட்ட விழிப்புணர்வு குறித்து பயிற்சிகள் நடைபெற்றது. 26 பேர் பங்கேற்றனர்.
- கறுப்பு தினக் கண்டன ஆர்ப்பட்டம் ஆகஸ்ட் 10,2026 பாளையங்கோட்டை மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்றது. 31 பேர் பங்கேற்றனர்.

## 8. நற்செய்திப் பணிக்குழு

- திக்கணங்கோடு, வெட்டுவெந்தி, நட்டாலம் திருத்தலம் ஆற்றூர், பரக்குன்று, சூசைபுரம், ஆகிய பங்குகளில் நற்செய்திக் கொண்டாட்டம் மற்றும் இரவு விழிப்புச் செபம் நடைபெற்றது.

## 9. சுற்றுச்சூழல் இயக்கம்

- கருத்தாளர் பயிற்சி: 12.08.2026 அன்று டிரினிட்டி அரங்கில் வைத்**து இயற்கையைப் பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்கள்** பற்றி பயிற்சி நடைபெற்றது. 25பேர் பங்கேற்றனர்.

## 10. பொதுநிலையினர் பணிக்குழு

- 11.09.2026 டிரினிட்டி மேய்ப்புப் பணி மையத்தில் வைத்துத் தேர்தல் தயாரிப்பு பயிற்சி நடைபெற்றது. 45 பேர் பங்கேற்றனர்.

# MARY AGENCIES & ELECTRICALS

MAMOOTTUKADAI,VIRICODE POST,
MARTHANDAM - 629165
K.K DIST, TAMIL NADU




We are providing quality products in retail and Wholesale of branded electrical products, plumping products and sanitaryware products institutions throughout kanyakumari district and Kerala.

Phone:04651-271662
Mobile:09442271662

Mobile:9443579667
Mobile:9360629377

Date of Publishing : **20-09-2026**
Puthia Thedal Registered with Register of News Paper of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92 Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office - 629167.




Edited & Published by **Rev. Fr. R. PAUL RICHARD JOSEPH** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at **THEDAL PRESS, AZHAGIYAMANDABAM**